வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 13.07.2023 வியாழக்கிழமை | இதழ் : 216 | பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தமிழர்கள் கேட்கும் சமஷ்டி ஒருபோதும் சாத்தியமாகாது!

## ஆளும் தரப்பு பிரதம கொறடா பிரசன்ன



கொழும்பு, ஜூலை 13

தமிழ்த் தேசியக் கட்சிகள் கோரும் சமஷ்டி தீர்வு ஒரு போதும் சாத்தியமாகாது. அரசாங்கம் அதனை அனுமதிக் காது. கூட்டாட்சி என்ற சமஷ்டி எனப்படுவது நாட்டை துண் டாடும் என்பது அனைவருக்கும் தெரியும். சமஷ்டி தொடர் பில் பேசுவது பயனற்றது என்று அரசாங்கம் தெரிவித்துள் ளது.

ஜனாதிபதியின் இந் திய பயணம், இந்திய பிர தமருக்கு தமிழ் கட்சிகள் கடிதம் அனுப்புவது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாக ஆளும் தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சரு மான பிரசன்ன ரணதுங் கவை தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இதன்போது, அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந் திய பயணம் திட் டமிட்டபடி இம் மாத இறுதியில் 15



## கடற்படைக்கு காணி சுவீகரிப்பு; மண்டைதீவில் மக்கள் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 13

மண்டைதீவு கிழக்கில் 18 ஏக்கர் பொது மக்களுக்கு சொந்தமான காணியை கடற்படைக்கு சுவீகரிக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று போராட்டம் நடத்தப்பட்டது.

வெலுசுமண கடற்படை தளத்துக்கு அருகில் காலை 7.30 மணியளவில் முத்துமாரி அம்மன் கோயில டியில் கூடிய பொது மக்களும் அரசியல்வாதிக ளும், பின்னர் வெலுசுமண கடற்படை தளம் 15

## தமிழர் நிலத்தை ஆக்கிரமித்துள்ள கடற்படையினர் வெளியேறவேண்டும்

### கஜேந்திரன் எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 13

தமிழரின் நிலங்களை சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கமைய ஆக்கிரமித்துள்ள கடற் படை முற்றாக வெளியேற ப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

மண்டைதீவு கிழக்கு கிராம சேவகர் பிரிவுக் குட்பட்ட 29 தனி நபர் களுக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கு அதிகமான காணிகளின் சுவீக ரிப்பை தடுத்து நிறுத்தக்கோரி வெலுசுமண கடற்படை முகாமுக்கு முன்னால் எதிர்ப்புப் போராட்ட மொன்று நேற்று முன் னெடுக்கப்பட்டது.

இந்தப்போராட் டத்தின் பின்னர் 15

## இந்திய பிரதமருக்கான கடிதம் கூட்டமைப்பு இன்று அனுப்புகிறது!

### 4 கட்சிகளின் தலைவர்கள் நேற்று ஒப்பம்



யாழ்ப்பாணம், ஜூலை 13

இந்தியப் பிரதமர் நரேந் திர மோடிக்கு அனுப்பு வதற்காக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, தமிழ் மக்கள் கூட்டணி என்பன இணைந்து தயாரித்த கடி தத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் நேற்று ஒப்பமிட்ட னர். இந்த 15

## இரு மருந்துகள் நீக்கப்பட்டன!

கொழும்பு, ஜூலை 13

பல்வேறு சிக்கல் களை ஏற்படுத்திய இரு மயக்க மருந்துகள் பாவ னையிலிருந்து நீக்கப் பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவற்றுக்கு பதி லாக வேறு மயக்க மருந்தை இறக்குமதி செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் மருத்துவர் சமன் ரத் நாயக்க குறிப்பிட்டுள் ளார்.

இந்த மருந்துகள் இன்றைய தினம் நாட் டுக்குக் கிடைக்கும் என்றும் அவர் தெரி வித்தார்.

கடந்த காலங்களில் குறித்த மயக்க மருந்து களைப் பயன்படுத்தி 15

## கொழும்பிலிருந்து யாழுக்கு இன்று விசேட ரயில் சேவை!

யாழ்ப்பாணம், ஜூலை 13

கொழும்பு - கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத் துக்கு இன்று வியாழக்கிழமை விசேட ரயில் சேவை நடைபெறவுள்ளது.

கோட்டையிலிருந்து அதிகாலை 5.45 மணிக்கு புறப்படும் இந்த ரயில் நண்பகல் 12.16 மணிக்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடையும் என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் 6 மாத காலத்தின் பின்னர் யாழ்ப் பாணம் வரும் ரயிலை வரவேற்பதற்கு போக்கு வரத்து மற்றும் புகையிரதத் துறை அமைச்சர் 15

## 35 ஆயிரம் ஆசிரியர்க்கு பற்றாக்குறை

கொழும்பு, ஜூலை 13

நாட்டில் தற்போது 35 ஆயிரத்துக்கும் அதிகமான ஆசிரியர்க ளுக்கு பற்றாக்குறை நிலவுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குறிப் பிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் ஆசிரியர் பற்றாக்குறை உக்கிரமடைந்துள்ளது. வட மாகா ணத்தில் மாத்திரம் பல காரணிகளால் சுமார் 200 பாடசாலைகள் தற்போது மூடப்பட் டுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாத் திரம் சுமார் 4 ஆயிரம் ஆசிரி யர்களுக்கு 15

## நல்லிணக்க முயற்சி குறித்து 3 நாடுகள் முக்கிய பேச்சு!

கொழும்பு, ஜூலை 13

நாட்டில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை கட்டி யெழுப்புதல் குறித்து தென்னாபிரிக்கா, சுவிற்சர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் வெளிவிவகார அமைச்சு முக்கிய பேச்சுகளை முன்னெடுத்துள்ளது.

நாட்டில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஸ்தாபிப்பதற்கான முயற்சிக ளில் அரசாங்கம் ஈடுபட்டுவரும் நிலையில், 15

## ஹெரோயினுடன் கைதானவருக்கு இரட்டைத் தூக்குத் தண்டனை!

### வவுனியா மேல் நீதிமன்று விதித்தது

வவுனியா, ஜூலை 13

உயிர்க்கொல்லி போதைப்பொருளான ஹெரோயினை உடை மையில் வைத்திருந்தமை, விற்பனை செய்யும் நோக் குடன் கடத்த முற்பட் டார் என்ற குற்றச்சாட்டு களில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த நபருக்கு இரட் டைத் தூக்குத் தண்டனை விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்க வாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணம் நாவற் குழியைச்சேர்ந்த கந்தையா தியாகராஜா (வயது - 45) என்ற நபருக்கே 15

## எடுத்ததற்கெல்லாம் சர்வதேச விசாரணையை கேட்காதீர்கள்

### பாதுகாப்பு அமைச்சின் செயலர் கமல்



கொழும்பு, ஜூலை 13

எடுத்ததற்கெல்லாம் சர்வதேச விசாரணை, சர்வதேச கண்காணிப்பை கேட்பது சிறுபிள்ளைத் தனமானது. அவ்வாறு செய்யாதீர்கள் என்று தமிழ் அரசியல்வாதிகளை கோரியுள்ளார் பாது காப்பு அமைச்சின் செய லர் கமல் குணரட்ண.

கொக்கிளாய் மனிதப் புதைகுழி விவகாரம், இது தொடர்பில் சர்வ தேச விசாரணை கண்காணிப்பு 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# எரிவாயுவின் விலை குறைவடைந்தும் உணவகங்கள் விலை குறைக்கவில்லை!

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 13

எரிவாயுவின் விலை உயர்வை காரணம் காட்டி உணவுப் பண்டங்களின் விலைகளை உயர்த்திய யாழ். மாவட்ட உணவகங்கள் எரிவாயுவின் விலை சுமார் 1500 ரூபாயால் ஒரே மாதத்தில் குறைந்த நிலையில், உணவுப் பண்டங்களின் விலைகளை குறைக்காமல் விற்பனை செய்கின்றன என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் அநேகமான உணவகங்கள் எரிவாயு விலை அதிகரிப்பை காரணம் காட்டி, உணவுப் பண்டங்களின் விலைகளை திடீர் திடீரென அதிகரித்தன. மதிய சைவ உணவு ஒரு பொதி அறுநூறு ரூபாய், அசைவ உணவு ஆக குறைந்தது ஆயிரம் ரூபாய், றோல் ஒன்றின் விலை நூறு ரூபாய் என பல தின்பண்டங்களின் விலைகள் சடுதியாக அதிகரித்தன.

எரிவாயுவின் விலை 5 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக விற்பனை செய்தபோது உணவகங்களில் உணவுகள் அதிக விலைக்கு விற்கப்பட்டது. அவ்வாறிருக்கையில், எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டபோதும் உணவுகளின் விலைகள் குறைக்கப்படவில்லை.

யாழ். நகரப் பகுதியில் அமைந்துள்ள பிரபல குளிர்பான நிலையங்களில் றோல் ஒன்று 100 ரூபாய்க்கே விற்கப்படுகிறது. இதே நிலைமையே பல உணவகங்களிலும் உள்ளது.

ஆகவே, யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்குகின்ற மாவட்ட பாவனையாளர் அதிகார சபை இவ்விடயம் தொடர்பில் மக்கள் நலன் சார்ந்து செயல்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபையை தொடர்பு கொண்டு கேட்ட போது, அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சுற்றுலா பயணி வன்புணர்வு இராணுவ கோப்ரல் கைது!

கொழும்பு, ஜூலை 13

கண்டியில் இருந்து தம்புள்ளை நோக்கி பயணித்த தனியார் பேருந்தில் துருக்கி பெண் சுற்றுலா பயணி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் இராணுவ கோப்ரல் ஒருவர் தம்புள்ளை தலைமையக பொலிஸாரால் நேற்று முன்தினம் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பிரதேசத்தில் அமைந்துள்ள இராணுவ முகாமில் பணிபுரியும் மாத்தளை பிரதேசத்தை சேர்ந்த கோப்ரல் ஒருவரே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் துருக்கிய பெண் பயணி அறிவித்ததையடுத்து, சந்தேகநபர் தம்புள்ளை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பின்னர் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின் போது அவர் இராணுவ கோப்ரல் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் தொடர்பில் தம்புள்ளை தலைமையக பொலிஸ் அதிகாரிகள் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஊசி ஏற்றப்பட்ட பின்னரே எனது மகள் உயிரிழந்தார்

## பாதிக்கப்பட்ட தாயார் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 13

பேராதனை பொது மருத்துவமனையில் செலுத்தப்பட்ட ஊசி மூலம் தனது மகள் உயிரிழந்தார் என்று தாய் ஒருவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வயிற்று உபாதையால் பாதிக்கப்பட்டிருந்த 21 வயதான சாமோதி சந்தீபனி என்ற யுவதி அண்மையில் கொட்டலிகொடை பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பேராதனை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இவர் பொத்தபிட்டிய அலகல்லை பிரதேசத்தை சேர்ந்தவராவார்.

சிகிச்சையின் போது அவருக்கு போடப்பட்ட ஊசியால் உடல்நிலை மோசமாகி உடல் நீல நிறமாக மாறியதாக சாமோதியின் தாய் கூறியுள்ளார்.

"எனது மகளை 10ஆம் திகதி பேராதனைக்கு அழைத்து வந்தோம் எனது மகள் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்து 17ஆம் இலக்க விடுதிக்கு மாற்றப்பட்டார். சுமார் 3.30 மணியளவில், என் மகளுக்கு சேலைன் கொடுத்தார்கள். அதன் பிறகு இரண்டு மருந்துகள் எழுதி கொடுத்தார்கள். இரண்டு ஊசிகள் போட்டவுடன் எனக்கு ஏதோ நடக்கப் போகிறது என்று என் மகள் சொன்னாள். மலசல கூடத்துக்கு சென்ற மகள் மயங்கி விழுந்தாள் அவளது கை,கால்கள் நீலமாக மாறியது. நான் அலறியதும், தாதியர் வந்து மகளை விடுதிக்கு கொண்டு வந்தனர். எனக்கு ஒரே ஒரு மகள். என் குழந்தைக்கு வேறு எந்த நோயும் இல்லை." என்று அந்தத் தாயார் கூறியுள்ளார்.

# அலங்கரிக்கப்படும் ஓட்டோக்களுக்கு கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஜூலை 13

மேலதிக பொருட்களை கொண்டு அலங்கரிப்படும் முச்சக்கர வண்டிகளுக்கு கட்டணம் அறவீட்டு கீழ் அனுமதி வழங்குவதற்கு மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அந்த திணைக்களம், முச்சக்கர வண்டி சங்கங்களின் தொடர்ச்சியான கோரிக்கைக்கு அமைய குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, வீதியில் பயணிப்போருக்கு அனர்த்தம் அல்லது இடையூறு ஏற்படாத வகையிலான அலங்கரிப்புக்காக முச்சக்கரவண்டியின் பின்புறத்தில் அலுமினிய ஏணியை பொருத்த ஆயிரம் ரூபாய் அறவிடப்படும் என அந்த திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மல்லாவி இளைஞர் கொலை; கைதான நால்வருக்கு மறியல்

முல்லைத்தீவு, ஜூலை 13

மல்லாவி - பாலி நகரில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைதான சந்தேகநபர்கள் நால்வரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாலிநகரில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக இளைஞர் ஒருவர் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்பட்டார்.

மல்லாவி பொலிஸார் - குற்றப்புலனாய்வுத் துறையினர் இணைந்து இந்த கொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில், நான்கு சந்தேகநபர்களை மல்லாவி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்திருந்தனர்.

அவர்களில் மூவர் நேற்று முன்தினமும், ஒருவர் நேற்றும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நால்வரையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட இந்த துப்பாக்கிச்சூட்டில் 23 வயதான இளைஞர் ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ். பல்கலை துணைவேந்தர் தெரிவு; பேராசிரியர் சிறீசற்குணராஜா முன்னிலை!

யாழ்ப்பாணம், ஜூலை 13

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த நான்கு பேரில், திறமைப் புள்ளி அடிப்படையில் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிரேஷ்ட பேராசிரியர் ரி. வேல்நம்பி, பேராசிரியர் செ. கண்ணதாசன் ஆகியோர் பேரவையால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தரை நியமிப்பதற்கான சுற்றுநிருபத்துக்கு அமைவாகத் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்தவர்களின் தகுதி, தராதரங்களின் அடிப்படையில் திறமைப் புள்ளியிடலுக்காகப் பல்கலைக்கழக பேரவை நேற்று புதன்கிழமை காலை கூடியது.

இதன்போது, துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, உயர் பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசியர் செ. கண்ணதாசன், முகா



மைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் முன்னாள் பீடாதிபதியும், சிரேஷ்ட பேராசிரியருமான தி. வேல்நம்பி மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக விலங்கியல் துறைப் பேராசிரியர் பி. வினோபாபா ஆகியோர் பேரவை உறுப்பினர்கள் முன்னிலையில் தமது அறிக்கைகளை முன்வைத்தனர்.

சுற்றறிக்கையில் வரையறுக்கப்பட்ட புள்ளித் திட்டத்துக்கமைய ஒவ்வொரு பேரவை உறுப்பினர்களும் தனித் தனியாகப் புள்ளிகளை வழங்கினர். புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களையும் முறையே பேராசிரியர் சி. சிறீசற்குணராஜா, சிரேஷ்ட பேராசிரியர் ரி. வேல்நம்பி, பேராசிரியர் செ. கண்ணதாசன் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இதனடிப்படையில், பேரவையின் பரிந்துரை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் ஊடாக ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

1978ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக் கழகச் சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின்படி பல்கலைக்கழகப் பேரவையால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பேரில் ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதிபதி அறிவிப்பார்.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதால், மிக விரைவில் அடுத்த துணைவேந்தர் அறிவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# நிறுத்தப்பட்ட வீட்டு திட்ட நிர்மாண பணிகள் ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 13

மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளால் பாதியில் நிறுத்தப்பட்ட கொழும்பு நகரில் 10 நடுத் தர வருமான வீட்டுத் திட்டங்களின் நிர்மாண பணிகளை மீள ஆரம் பிக்க இணக்கம் காணப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட முதலீட்டு நிறுவனங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாட லின்போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ். சத்யானந்தா தெரிவித்துள்ளார்.

2,000இற்கும் மேற்பட்ட வீடுகளைக் கொண்ட இந்த வீட்டுத் திட்டத்தை நிர்மாணிப்பதற்காக 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் மூலப்பொருட்கள் மற்றும் எரி பொருட்களின் விலை உயர்வு, மூலப்பொருட்கள் தட்டுப்பாடு உள்ளிட்ட பல பிரச்னைகளால் இந்த திட்டங்களின் கட்டுமானம் ஓராண்டுக்கும் மேலாக முடங்கியது எனவும் அவர் தெரிவித்தார்.

வீட்டு தொகுதிகளின் பெறுமதியை அதிகரிப்பதன் மூலம் வீட்டுத் திட்டங்களை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்த நிறுவனங்களின் கோரிக்கைக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது. 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள் திட்டங்களின் நிர்மாண பணிகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
13.07.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சம்பந்தன்மீது வலுக்கும் சந்தேகம்

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதும் விவகாரம் இப்போது கிணறு தோண்ட பூதம் வந்த கதையாகிவிட்டது. உண்மையில், இவ்வாறானதொரு முயற்சிக்கு பிள்ளையார் சுழியிட்டது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ கட்சியாகும். ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்தான் இந்த முயற்சியில் தீவிர கரிசனையெடுத்து - பின்னர் ஏனையவர்களையும் இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றிபெற்றார்.

ஆரம்பத்திலிருந்தே ரெலோவின் முயற்சிக்கு இலங்கை தமிழரசு கட்சி ஆதரவு வழங்கியிருக்கவில்லை. தமிழரசு கட்சியின் சார்பில் அரசியல் விவகாரங்களை கையாளும் எம். ஏ. சுமந்திரன் ரெலோவின் முயற்சியை பொதுவெளிகளில் விமர்சித்திருந்தார். ஆனாலும், ரெலோவும் பின்னர், சித்தார்த்தன் தலைமையிலான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் இந்த விடயத்தில் உறுதியாக இருந்ததைத் தொடர்ந்து ஒரு கட்டத்தில் தமிழரசு கட்சியும் இந்த முயற்சியோடு இணைந்து கொண்டது.

சம்பந்தனின் கையெழுத்து முக்கியமென்னும் நிலையில் ஏனைய கட்சிகள் சம்பந்தனுக்காக காத்திருக்கும் நிலைமை ஏற்பட்டது. இந்தநிலையில், சம்பந்தன் கூறிய விடயங்களையும் உள்ளடக்கி பின்னர் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. இந்த விடயம் அரசியலை அவதானித்து வருபவர்கள் அறிந்த விடயம்தான். ஆனால் இப்போது, இரண்டாவது கடிதம் அனுப்பும் விடயத்தில் சம்பந்தன் கையெழுத்திட மறுத்திருக்கின்றார். இந்தப் பின்புலத்தில் தனியான கடிதம் ஒன்றை தமிழரசு கட்சி அனுப்பவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இந்த அடிப்படையில் மூன்று கடிதங்கள் இந்தியாவுக்கு செல்லவுள்ளன. இப்போது இந்தியா என்ன செய்வது? இந்தியா செல்லவுள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கோ இது மகிழ்ச்சியான செய்தி - அவரைப் பொறுத்த வரையில் பழம் நழுவி பாலில் விழுந்திருக்கின்றது.

முன்னைய கடிதத்தில் கையெழுத்திட்ட சம்பந்தன் ஏன் இப்போது மறுக்கின்றார்? கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் நடவடிக்கையில் ஆச்சரியமில்லை. ஏனெனில், அவர்கள் 13ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்க முயற்சிக்கின்றனர். இந்த விடயத்தில் அவர்களுக்கும் சிங்கள அடிப்படைவாதிகளுக்கும் பெரிய வேறுபாடுகள் இல்லை. இதேவேளை, இந்தியாவிடம் சமஷ்டியை வலியுறுத்துவதில் எவ்வித பயனுமில்லை என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனால், சம்பந்தனின் பிரச்னை அப்படியல்ல.

கடந்த பாராளுமன்ற தேர்தலின்போது, திருகோணமலையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பிராந்திய சக்தியான இந்தியா தங்களுக்கு பின்னாலிருப்பதாகக் கதை சொல்லியவர் சம்பந்தன். ஆனால், அவர் ஏன் இந்தியா ஆதரவளிக்கும் ஒரு விடயத்தை, இப்போது ஏற்க மறுக்கின்றார்? அவ்வாறாயின் இந்தியாவை நோக்கி செல்வதை சம்பந்தன் விரும்பவில்லையா? உலகின் மிகவும் சக்தி வாய்ந்த நபர்களில் ஒருவராகக் கணிக்கப்படும் இந்திய பிரதமர் மோடியின் அழைப்பை மாவையின் மகனுக்கு திருமணமென்று கூறி நிராகரித்தவர் சம்பந்தன். சம்பந்தன் எதிர்கட்சித் தலைவராக இருந்தபோது, ஒருமுறைகூட புதுடில்லிக்கு செல்லவில்லை. திட்டமிட்டு இந்தியாவிலிருந்து எட்ட நின்றார். இந்த நிலையிலேயே, தற்போது இந்தியாவை நோக்கிச் செல்வதைத் தவிர்க்க விரும்புகின்றார். ஆனால், ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஒரு கடிதத்தை அனுப்புவதால் வேறு வழியின்றி ஒரு கடிதத்தை அனுப்ப முற்படுகின்றார். உண்மையில், சம்பந்தனுக்கு தமிழ் மக்களின் பிரச்னை - ஒரேயடியாக இல்லாவிட்டால் கூட, படிப்படியாகவாவது தீர வேண்டுமென்னும் கரிசனை சிறிதும் இல்லையா?

## சிவசிதம்பரத்தின் பிறந்தநாளை முன்னிட்டு மாட்டு வண்டி சவாரி!



வடமராட்சி, ஜூலை 13

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவரும் முன்னாள் உடுப்பிட்டி, நல்லூர் தொகுதிகளின் பாராளுமன்ற உறுப்பினருமான அமரர் மு. சிவசிதம்பரத்தின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தால் மாட்டு வண்டி சவாரி நடத்தப்பட்டது.

வடமராட்சி - சோனப்பு மாட்டுவண்டி சவாரி திடலில் கரவெட்டி அபிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி சி. பொன்னம்பலம் தலைமையில் இந்த சவாரி நடைபெற்றது. அதன் போசகரும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான மருத்து வர். ஆ. கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

போட்டிகள்பல்வேறு பிரிவுகளாக நடத்தப்பட்டு இதில் முதல் இடம் பிடித்த மாட்டு வண்டிகளின் உரிமையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த சவாரியில் வட மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாட்டு வண்டிகள் பங்கேற்றன. (ஐ-02)

## உரக் கொடுப்பனவு விவசாயிகளின் வங்கி கணக்கில் வைப்பிலிடப்படும்

கொழும்பு, ஜூலை 13

எதிர்வரும் பெரும்போக பருவத்தில் நெல் செய்கையாளர்களுக்கு உர மானிய கொடுப்பனவுகள் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு வழங்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு ஹெக்ரெயர் நெற் செய்கைக்காக விவசாயிகளுக்கு 20 ஆயிரம் ரூபாயும் உரம் கொள்வனவு செய்வதற்கு இரண்டு ஹெக்ரெயருக்கு 40 ஆயிரம் ரூபாயும் வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் என்ற வகையில் தீர்மானித்துள்ளார்.

அமைச்சரவையும் இந்த முன்மொழிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இதன்படி, விவசாயிகளுக்கு சிறுபோக பருவத்துக்கான உரங்களை கொள்வனவு செய்வதற்கு வவுச்சர்கள் வழங்கப்படுகின்றன.

இதற்கிடையில், சிறுபோக பருவத்துக்கான பருவத்திற்கு தேவையான உர இருப்புகளை கொள்வனவு செய்வதற்காக விவசாயிகளுக்கு ஆயிரத்து 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்தது.

நாடு முழுவதும் உள்ள 5 இலட்சத்து 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இந்த மானியத்தை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜூலை 4 ஆம் திகதி வரை மொத்தம் 5 இலட்சத்து 34 ஆயிரத்து 433 விவசாயிகள் வவுச்சர்களைப் பெற்றுள்ளனர். சிறுபோக பருவத்திற்கு தேவையான ரி. எஸ். பி. உரம் ஏற்கனவே விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

வவுச்சர் அமைப்பில் சில சிக்கல்கள் இருப்பதால், விவசாயிகளின் கணக்குகளில் நேரடியாக பணம் வரவு வைக்கப்படும் என்று அமைச்சகம் குறிப்பிட்டது.

வவுச்சர்களைப் பயன்படுத்தி விவசாய அமைச்சு கூறியது விவசாயிகள் தங்களுக்கு விருப்பமான உரங்களை வாங்கலாம். கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்தது - என்றார். (ஐ)


## டெங்கு நோய்க்கு 33 பேர் மரணம்!

கொழும்பு, ஜூலை 13

டெங்கு நோயால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 33ஆக அதிகரித்துள்ளது. நாட்டில் இந்த வருடம் 52 ஆயிரத்து 21 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்திலேயே 25 ஆயிரத்து 945 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். டெங்கு அபாயம் அதிகமாகவுள்ள 61 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளை மையமாக வைத்து இன்று முதல் மூன்று நாட்களுக்கு விசேட நுளம்பு ஒழிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜுலை - 13 வியாழக்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 28
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : ஏகாதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். மனக்குழப்பமும் அதிகரிக்கும். விழிப்புடன் இருக்க வேண்டிய நாள்.

**இடபம்**
கணவன் -மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் பேசி வசூலிக்கப்பாருங்கள். மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். போராடி வெல்லும் நாள்.

**மிதுனம்**
ஆன்மிகப் பெரியோரின் ஆசி கிட்டும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். உங்களின் புதிய முயற்சிகள் பலிதமாகும். லாபம் பெருகும் நாள்.

**கடகம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் நடக்கும்நாள்.

**சிம்மம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். மறைமுக விமர்சனங்கள் உண்டு. பொறுமை தேவைப்படும் நாள்.

**துலாம்**
தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். எதிர்பாராத நன்மை கிட்டும் நாள்.

**விருட்சிகம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**தனுசு**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் நல்ல செய்தி கேட்பீர்கள். திருப்தி உண்டாகும். கனவு நனவாகும் நாள்.

**மகரம்**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்கள் மீது கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் முக்கியத்தும் தருவார்கள். மாறுபட்ட அணுகுமுறையால் முன்னேறும் நாள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். சில அதிகாரிகளின் உதவியால் முடிவுகள் எடுப்பீர்கள். மனசாட்சிபடி செயல்படும் நாள்

# நான் அரசியலுக்கு வந்தால் படங்களில் நடிக்க மாட்டேன்

## விஜய் கூறினார் என்று நிர்வாகிகள் தெரிவிப்பு

சென்னை, ஜுலை 13

தமிழகத்தின் 234 தொகுதி பொறுப்பாளர்களுடன் 3 நாட்களுக்கு நடிகர் விஜய் ஆலோசனை நடத்துகிறார். நேற்று முன்தினம் நடந்த முதல் நாள் கூட்டத்தில், "நான் அரசியலுக்கு வந்தால், அதில்தான் என் முழு கவனமும் இருக்கும். திரைப்படங்களில் நடிக்க மாட்டேன்" என்று அவர் கூறினார் என்று நிர்வாகிகள் தெரிவித்தனர்.

அரசியலில் களமிறங்குவது குறித்து நடிகர் விஜய் இதுவரை நேரடியாக எதுவும் தெரிவிக்கவில்லை. எனினும், அவரின் ஒவ்வொரு நடவடிக்கையும் அதை சார்ந்தே உள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், சென்னை பனையூரில் உள்ள தனது இல்லத்தில், தமிழகத்தின் 234 தொகுதிகளை சேர்ந்த மக்கள் இயக்க நிர்வாகிகளையும் சந்திக்க விஜய் திட்டமிட்டுள்ளார். இதில் முதல்கட்ட சந்திப்பு நேற்று முன்தினம் நடந்தது.

கூட்டம் முடிந்து வெளியே வந்த நிர்வாகிகள் கூறுகையில், "அரசியலுக்கு வருமாறு விஜய்யை அழைத்தோம். 'நான் அரசியலுக்கு வந்தால், அதில் தான் என் முழுக்கவனமும் இருக்கும். திரைப்படங்களில் நடிக்க மாட்டேன்' என்றார். அவரின் அரசியல் வருகைக்கான அனைத்து கட்டமைப்புகளையும் செய்து விட்டோம். அவர் கைகாட்டியதும் அரசியல் பணியை தொடங்கி விடுவோம். விஜய் எப்போது அரசியலுக்கு வந்தாலும் பணியாற்ற தயாராக உள்ளோம் - என்றனர். (ஐ)

# தி. மு. கவினர் மத்திய அரசிடம் சரணாகதி அடைந்து விட்டனர்!

## எடப்பாடி பழனிசாமி



சென்னை, ஜுலை 13

தங்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களில் இருந்து மீள முடியாத தி.மு.கவினர் மத்திய அரசிடம் சரணாகதி அடைந்துள்ளனர் என அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி கூறியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன், ஆளுநர் மீது புகார் தெரிவித்து ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதயிருந்தார். இதற்கு அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, அ. தி. மு. க. பொதுச்செயலாளர் பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தானே நீதிபதியாக மாறி முன்னாள் அமைச்சர்களை குற்றவாளி என குறிப்பிடுகிறார் முதல்வர் ஸ்டாலின். தன் குடும்பம் மீதும், சக அமைச்சர்கள் மீதும் உள்ள குற்றச்சாட்டுகளை மறைக்க முதல்வர் ஸ்டாலின் முயல்கிறார். ஊழலின் ஊற்றுக்கண்ணாக தி. மு. கவினர் மற்றவர்களைப் பார்த்து ஊழல்வாதிகள் என குறிப்பிடுகின்றனர்.

தங்களுக்கு ஏற்பட்ட சிக்கல்களில் இருந்து மீள மத்திய அரசிடம் சரணாகதி படலத்தை தொடக்கியுள்ளனர். எம். ஆர். விஜயபாஸ்கர், கே. சி. வீரமணி மீது பொய் வழக்கு போட்டு விட்டு குற்றவாளி என முதல்வர் கூறுகிறார்.

தி. மு. க. வழக்கறிஞர்களையே அரசு வழக்கறிஞர்களாக நியமித்து வாதாடி, உலகமே வியக்கும் வகையில் ஒரு சில அமைச்சர்கள் தற்போது விடுதலையாகி வருவதை தமிழக மக்கள் கடுங்கோபத்துடன் பார்த்து வருகின்றனர்.

முதலில், விடியா ஆட்சியின் தற்போதைய அமைச்சர்கள், முன்னாள் அமைச்சர்கள் என பலர் மீது நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளை அரசியல் கட்சி சார்பற்ற நேர்மையான வழக்கறிஞர்களை அரசு வழக்கறிஞர்களாக நியமித்து, நேர்மையாக நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்ளுங்கள்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது, ஸ்டாலினால் குற்றம் சுமத்தப்பட்ட அமைச்சர் செந்தில்பாலாஜியை அமுலாக்கத் துறை, விசாரணைக்குப் பின் கைது செய்துள்ளது. கைதி எண் பெற்று சிறைத் துறை காவலில் உள்ள ஒருவரை துறையில்லா அமைச்சர் என்று ஸ்டாலின் அறிவித்தது ஏன்?

மக்கள், ஆட்சி அமைப்பதற்காக அளித்த அதிகாரத்தை கொண்டு, மக்களுக்கு நல்லாட்சியை வழங்க வக்கில்லாத இந்த விடியா அரசு, வரி உயர்வு, கட்டண உயர்வு, உணவுப் பொருட்கள் விலை உயர்வு என்று மக்கள் விரோத நடவடிக்டிக்கைகளையே தொடர்ந்து வருகிறது - என்று கூறியுள்ளார். (ஐ)

# கட்சி பிரச்னைகளை தீர்க்கும் பொறுப்பு உதயநிதியிடம்!

## முதல்வர் ஸ்டாலின் ஒப்படைத்தார்

சென்னை, ஜுலை 13

கட்சி பிரமுகர்களை சந்தித்து பேசி, கட்சியில் நிலவும் குழப்பங்களை சரி செய்யும்படி, அமைச்சர் உதயநிதிக்கு தி. மு. க. தலைவரும், முதல்வருமான ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து, அறிவாலய வட்டாரங்கள் கூறியவை வருமாறு,

தி. மு. க., நிர்வாகிகள் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்னைகள் குறித்து பேச, ஸ்டாலினிடம் நேரம் கேட்டு கடிதம் எழுதி வருகின்றனர். முதல்வராக பொறுப்புபெற்ற பின், அவரால் முழுமையாக கட்சியினரை சந்திக்க முடியவில்லை.



இதனால், கட்சியினர் பலரும் அதிருப்தியில் இருந்தனர்.

தமிழகம் முழுதும் கட்சி தொடர்பான பிரச்னைகள், அதிகரித்து வருகின்றன. இது, உளவுத் துறை வாயிலாக, முதல்வருக்கு எடுத்து கூறப்பட்டது. இதையடுத்து, ஸ்டாலின், அந்த பொறுப்பை அமைச்சர் உதயநிதியிடம் ஒப்படைத்துள்ளார்.

இதை தொடர்ந்து, தினமும் கட்சி நிர்வாகிகளை, உதயநிதி சந்திக்கிறார். தினமும் கிடைக்கும் தகவல்களை உதயநிதி குறிப்பு எடுத்து முதல்வரிடம் ஆலோசித்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க வைக்கிறார்.

மக்களின் அதிருப்தியை பெற்றுள்ள மாநில, மாவட்ட கட்சி நிர்வாகிகள் மீது, தயவு தாட்சண்யம் இன்றி, நடவடிக்கை எடுக்க வேண்டும் என, ஸ்டாலினிடம் உதயநிதி கேட்டுள்ளார். இதனால், அடுத்தடுத்து பல மாற்றங்களும் அதிரடி உத்தரவுகள் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. கட்சியில் உதயநிதியின் ஆதிக்கம் மேலோங்கி வருவதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

# நாட்டின் வங்குரோத்தை ஆராய சஜித் தலைமையில் விசேட குழு

## சர்வதேச ஆதரவை பெறவும் திட்டம்

கொழும்பு, ஜூலை 13

**இலங்கை எப்படி வங்குரோத்து நிலைக்குச் சென்றது என்பதை ஆராய்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குழுவொன்றை நியமிக்க உள்ளதாகவும், வெளிநாட்டு நிறுவனங்களிடம் இருந்தும் தகவல்களைச் சேகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



எதிர்க்கட்சித்தலைவர் சுயமாக குழுவொன்றை நியமிப்பதோடு வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் நிபுணர்களிடமிருந்தும் தகவல்களைப் பெறுவார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் நியாயத்தன்மை குறித்து வினவியபோது, எந்த நேரத்திலும் எந்தவொரு அரச அதிகாரியையும் விசாரணைக்கு அழைக்கலாம் என சபாநாயகர் வழங்கிய தீர்ப்பை அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் அவ்வாறு செய்வார் என அத்தநாயக்க தெரிவித்தார்.

"எதிர்க்கட்சித் தலைவர் எந்த நேரத்திலும் எந்த அரச அதிகாரியையும் அழைத்து விசாரணை நடத்தலாம் என சபாநாயகர் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளார். எனவே பிரேமதாஸ ஒரு குழுவை நியமிப்பது சட்டபூர்வமானதாக இருக்கும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரால் நியமிக்கப்படும் குழுவில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி ஆகிய இருதரப்பு எம்.பி.க்கள் இருப்பார்கள்.

சபாநாயகர் நியமித்த தெரிவுக்குழுவில் இருந்து அனைத்து எதிர்க்கட்சி எம்.பி.க்களும் இராஜினாமா செய்ய முடிவு செய்துள்ளனர். குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களும் அதன் தலைவரும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்ற அரசாங்கத்தின் உறுப்பினர்களாக இருப்பதால் இது எந்த நோக்கத்தையும் நிறைவேற்றாது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

(அ)

# 3 வைத்தியசாலைகளுக்கு மின்சாரசபை எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 13

இரத்தினபுரி போதனா பொது வைத்தியசாலை, எம்பிலிபிட்டிய மாவட்ட வைத்தியசாலை மற்றும் தெலிகம மாவட்ட வைத்தியசாலை ஆகியவற்றின் நிலுவையிலுள்ள மின்சாரக் கட்டணங்களை எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தாவிட்டால் அவற்றில் மின்சாரம் துண்டிக்கப்படும் என மின்சார சபை சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளது.

இந்த வைத்தியசாலைகள் தற்போது மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. இரத்தினபுரி பொது வைத்தியசாலை ஆரம்பத்தில் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. பின்னர் எம்பிலிப்பிட்டிய மற்றும் தெலிகம மாவட்ட வைத்தியசாலை, சப்ரகமுவ மாகாண சபையின் கட்டுப்பாட்டிலிருந்து மத்திய அரசாங்கத்திடம் கையகப்படுத்தப்பட்டது. சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் நிறுவப்பட்ட பின்னர், இரத்தினபுரி பொது வைத்தியசாலை போதனா பொது வைத்தியசாலையாக மாறியது.

இரத்தினபுரி பொது வைத்தியசாலைக்கு ஆறு மின்சாரக் கணக்கு இலக்கங்களில் இருந்து மின்சாரம் வழங்கப்பட்டதாகவும், அந்த ஆறு மீற்றர்களுக்கும் மின்சாரக் கட்டணம் செலுத்தப்படவில்லை எனவும் மின்சார சபை சுகாதார அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# பிக்குகளின் ஒழுக்கத்தில் கவனம் செலுத்தும் அரசு!

## விரைவில் வருகிறது சட்டமூலம்



கொழும்பு, ஜூலை 13

பிக்குகளின் ஒழுக்கம் மற்றும் பௌத்த சாசனத்துக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து எதிர்வரும் இரு மாதங்களில் பிக்கு கருத்தாடல் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அந்தச் சட்டமூலத்தின் வரைவு மேற்பார்வைக்காக மகாசங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும், மத குரோதத்தை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத குரோதத்தை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். எமது தேசம், சமயம், இனம், குலம், வர்க்கம் போன்ற பிரச்னைகளினால் பெரும் அசௌகரியங்களை சந்தித்த நாடாகும்.

பிக்குகளின் ஒழுக்கம் மற்றும் புத்த சாசனத்துக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து பிக்கு கருத்தாடல் சட்டமூலமொன்றை எதிர்வரும் இரு மாதங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக புத்த சாசனம் மற்றும் கலாசார செயற்பாடுகள் தொடர்பான அமைச்சின் செயலாளர் சோமரத்ன திஸாநாயக்க அறிவித்திருக்கிறார்.

அந்தச் சட்டமூலத்தின் இறுதி வரைவு மகா சங்கத்தினரின் மேற்பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மகாநாயக்கர்களின் நிலைப்பாடுகள் மற்றும் யோசனைகள் கிடைத்தவுடன் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார் -என்றார்.

(அ)

# 11 வயதுச் சிறுவன் கார் மோதி மரணம்!

கொழும்பு, ஜூலை 13

வீதி விபத்தில் 11 வயது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் புத்தளம், கற்பிட்டி பிரதேசத்தில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த சிறுவன் தந்தையுடன் வீட்டுக்கு அருகில் உள்ள கடைக்குப் பொருட்களை வாங்கச் சென்றபோதே விபத்தில் சிக்கியுள்ளார்.

இருவரும் வீதியில் நடந்து சென்றபோது பின்னால் வேகமாக வந்த கார் அவர்கள் மீது மோதியுள்ளது.

இதன்போது சம்பவ இடத்திலேயே குறித்த சிறுவன் உயிரிழந்துள்ளார். அவரின் தந்தை சிறுகாயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் காரின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# ஆடைத்தொழிற்துறை கடுமையான வீழ்ச்சி!




கொழும்பு, ஜூலை 13

நாட்டில் கடந்த 6 மாதங்களில் மட்டும் ஆடைத்தொழிற்துறையின் வருமானம் 1.9 பில்லியனால் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், அரசாங்கம் இது தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த நிலைமைத் தொடர்ந்தால், அனைத்து ஆடைத்தொழிற்சாலைகளையும் மூடவேண்டிய நிலைமை ஏற்படலாம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆடைத்தொழிற்சாலைகள் படிப்படியாக மூடப்பட்டுக் கொண்டுவருவதை காணக்கூடியதாக உள்ளது.

தேசிய உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கும் வகையிலேயே இந்த 200 ஆடைத்தொழிற்சாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

பல தொழிற்சாலைகள் இப்போதுகூட மூடப்பட்டுவிட்டன. சில தொழிற்சாலைகள் இலங்கையை விட்டு வேறு நாடுகளுக்கு சென்றுள்ளன.

கடந்த 6 மாதங்களில் மட்டும் ஆடைத்தொழிற்துறையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் 1.9 பில்லியன் அளவில் குறைவடைந்துள்ளது.

பங்களாதேஷ் ஆடைத்தொழிற்துறை ஊடாக, 19.6 பில்லியன் வருமானத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

நாட்டின் தேசிய வருமானத்தை உயர்த்த பெரும் பங்காற்றிய இந்த ஆடைக் கைத்தொழிலை, இன்று வீழ்ச்சியை சந்தித்துள்ள நிலையில், இதனை பாதுகாக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

ஐரோப்பா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கே அதிகளவில் ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையும் இல்லாமல் போகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

புதிதாக வருமானம் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகளை தேடுவதைப் போன்று, வருமானம் ஈட்டிவரும் தொழிற்துறைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் அரசாங்கத்திற்கு உள்ளது.

இதனைக் கவணத்தில் கொள்ளாவிட்டால் ஆடைத்தொழிற்சாலைகளை மூடவேண்டிய நிலைமை ஏற்படும் என்பதோடு, ஆயிரக்கணக்கான தொழில் வாய்ப்புக்களும் இல்லாது போகும் நிலைமையே நாட்டில் ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# களனி பல்கலை மாணவி மின்சாரம் தாக்கி மரணம்!

கொழும்பு, ஜூலை 13

வீட்டில் மின்சாரம் தாக்கி இளம் யுவதி ஒருவர் சாவடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா-அத்தனகல்ல பிரதேசத்தில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

களனி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 24 வயதுடைய எஸ்.ஆர்.ருஷாங்கி என்ற மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி ஆடைகளை அழுத்த மின்னழுத்தியைக் கையாண்டபோதே மின்சாரம் தாக்கிச் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

(அ)

# சர்வதேச நியமங்களுக்கு அமையவே மனித புதைகுழி அகழப்படவேண்டும்

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் போராட்டம்

முல்லைத்தீவு, ஜுலை 13

**அண்மையில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அல்லது சர்வதேச நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு சர்வதேச நியமங்களுக்கு அமைய இந்த அகழ்வுப் பணி மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நேற்றுக் கவலை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**




முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் 2500 நாட்களைக் கடந்து தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற நிலைமையில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக இந்தப் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

குறிப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளை தேடிவருகின்ற நிலையில் இறுதி யுத்தத்தில் சரணடைந்ததாக சந்தேகிக்கப்படுபவர்களுடை யதாக இருக்கலாம் என கூறப்படும் -கொக்குத்தொடுவாயில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைக்குழி அகழ்வுப் பணிகள் சர்வதேச நியமங்களுக்கு முரணாக இடம்பெற்று வருவதாகவும், எனவே சர்வதேச நிபுணத்துவம் பெற்றவர்களைக் கொண்டு சர்வதேச தலையீட்டுடன் குறித்த அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு உடலங்கள் யாருடையவை என்பது கண்டறியப்படவேண்டும் எனவும் வலியுறுத்தி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இலங்கையின் செயற்பாட்டை வரவேற்கின்றது பிரித்தானியா!

மனித உரிமைகள் பேரவையின் உலகளாவிய காலமுறை மீளாய்வு செயல்முறையுடன் இலங்கையின் ஆக்கபூர்வமான ஈடுபாட்டை பிரித்தானியா வரவேற்றுள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது அமர்வில் இலங்கைக்கான உலகளாவிய காலமுறை மீளாய்வுக்கான அறிக்கையை வெளியிட்டு பிரித்தானியா இதனை தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் அரசாங்கத் திணைக்களங்களால் நில அபகரிப்பு மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான கவலைகள் தொடர்பான தனது பரிந்துரைக்கு இலங்கையின் ஆதரவையும் பிரித்தானியா வரவேற்றுள்ளது.

அண்மைய ஆண்டுகளில் இலங்கை எதிர்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க அரசியல் மற்றும் பொருளாதார சவால்களை பிரித்தானியா ஏற்றுக்கொண்டது.

அனைத்து சமூகங்களுக்கும் நல்லிணக்கம், நீதி மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் முக்கியத்தும் மற்றும் ஒன்றுகூடல் மற்றும் கருத்துச் சுதந்திரத்திற்கான உரிமையின் முக்கியத்துவத்தையும் பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நீதி மற்றும் நல்லிணக்கத்தை அடைவதற்கும் இலங்கையுடன் ஆக்கபூர்வமாகச் செயற்படுவதாகவும் பிரித்தானியா மேலும் தெரிவித்துள்ளது.

(அ)

# நெல் கொள்வனவு விலை நிர்ணயம்

கொழும்பு, ஜுலை 13

எதிர்வரும் சிறுபோகம் மற்றும் பெரும்போக பருவகாலங்களில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை கிலோ 95 ரூபாய் மற்றும் 110 ரூபாய்க்கு இடையில் கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தல் சபை நெல்லை கொள்வனவு செய்யும் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

ஒரு கிலோ நெல்லை 100 ரூபாய்க்கு கொள்முதல் செய்ய வேண்டும் என பல்வேறு விவசாய சங்கங்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ள நிலையில் ஒரு கிலோ நாட்டு மற்றும் சிவப்பு அரிசி நெல் 95 ரூபாய்க்கும் சம்பா 100 ரூபாய்க்கும் கீரி சம்பா நெல்லை 110 ரூபாய்க்கும் கொள்வனவு செய்ய விலை நிர்ணயம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழு பரிந்துரைத்துள்ளது.

(அ)

# ரயில் இயந்திரங்கள் தட்டுப்பாடு!

கொழும்பு, ஜுலை 13

ரயில் இயந்திரத் தொகுதிகளுக்கான தட்டுப்பாடு காரணமாக வழமையான நேர அட்டவணைக்கு அமைய ரயில் சேவைகளை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


நாளாந்த ரயில் சேவைகளுக்காக 74 எஞ்சின்களும் 193 இயந்திரத் தொகுதிகளும் தேவைப்படுவதாக ரயில்வே அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

எனினும், பயணிப்பதற்கு ஏற்ற வகையில் 58 எஞ்சின்களும் 162 இயந்திரத் தொகுதிகளுமே தற்போது உள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

15 எஞ்சின்களும் 31 இயந்திரத் தொகுதிகளும் திருத்தப்பட வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் இந்திபொலகேவிடம் வினவியபோது, எஞ்சின்கள் மற்றும் இயந்திரத் தொகுதிகளை பழுதுபார்ப்பதற்கு தேவையான உதிரிப்பாகங்கள் தற்போது இறக்குமதி செய்யப்படுவதாக கூறினார்.

# தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம் வர்த்தமானியில்



கொழும்பு, ஜுலை 13

தேர்தல்கள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலம், வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஒரு தேர்தல் மனுவை முன்வைப்பதற்கான காலப்பகுதியை நீடிப்பதற்காகவும், குற்றத்திற்கான அபராத தொகையை அதிகரிப்பதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும் இந்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இது, உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தையும், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தையும், ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தையும், மாகாணசபைத் தேர்தல்கள் சட்டத்தையும் திருத்துவதற்கும், அவற்றோடு தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டமூலமாகும்.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவால், இந்த சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (அ)

# விவசாயிகளை மறந்தால் நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்படாது!

## சுட்டிக்காட்டுகிறார் பிரதமர் தினேஷ்



கொழும்பு, ஜுலை 13

விவசாயிகளை மறந்து விட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

விவசாயிகளை ஏற்றுமதி இலக்குடன் வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும் உள்ளூர் விதை விநியோக நிகழ்வு மாவத்தகம மீபேயில் நேற்று பிரதமர் தினேஷ் குணவர்தனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு கடுமையான பொருளாதார சிக்கலில் இருந்து இன்று மீண்டு எழுந்துள்ளமைக்கு முக்கிய காரணம் விவசாயமும் , விவசாயிகளின் முயற்சியே. நாட்டை பொருளாதார ரீதியாக கட்டியெழுப்புவதற்கான விசேட இலக்குகளை நிறை வேற்ற வேண்டும்.

அரசாங்கம் என்ற வகையில் நாட்டை சிக்கலான நிலையில் இருந்து இயல்பான நிலைக்கு மாற்றியமைக்க சிறு மற்றும் நடுத்தர தொழில்களுக்கு ஆதரவளிப்பதுடன், பொதுச் சந்தைக்கு வழங்கக்கூடிய நிவாரணங்களை உருவாக்குவது இன்றியமையாதது.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப சர்வதேச நாடுகளுடன் கடன் மறு சீரமைப்பு ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இருப்பினும் மக்கள் உணர்ச்சியுடன் நடந்து கொள்ளவேண்டும்-என்றார்.

இந்நிகழ்வில் , பாராளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன, கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி.விஜேசிறி, சீதாவக்க மற்றும் பாதுக்க பிரதேச செயலாளர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(அ)

ஈழநாடு



# வடக்கு-கிழக்கு பகுதிகளை மீண்டும் போராட்டக்களமாக மாற்றவேண்டும்

## கோருகிறார் முன்னாள் எம்.பி சரவணபவன்

யாழ்ப்பாணம், ஜூலை 13

**ஆக்கிரமிப்பு நிகழ்ச்சி நிரல் தற்போதைக்கு முடிவடையாத நிலையுள்ளதால், வடக்கு -கிழக்கு பகுதிகளை போராட்டக் களமாக மாற்றி தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.**



மண்டைதீவில், காணி சுவீகரிப்பிற்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்து நேற்று மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் திட்டத்தைத் தீட்டி தங்கள் நிகழ்ச்சி நிரலை ஒப்பேற்றிக் கொண்டு செல்கின்றார்கள். தற்போது பிடித்து வைத்திருக்கும் காணிகள் யாவும் வளம் நிறைந்த காணிகள்.

குறிப்பாக பொன்னாலை மக்கள் குடிதண்ணீருக்காக பவுசர் மூலம் நீரை பெறுகையில் குடிதண்ணீர்க் கிணற்றை கடற்படை கையகப்படுத்தி வைத்துள்ளது.

எங்கெங்கு புதைகுழிகள் உள்ள இடங்களை அடையாளப்படுத்தி புத்த கோயிலைக் கட்டுகின்றனர். இவை பற்றிய தகவல்கள் முற்கூட்டியே தெரிந்தும், அரசாங்கத்தில் வேலை செய்யும் தமிழ் அதிகாரிகளும் கையறு நிலையிலுள்ளனர்.

இன்றும் தமிழ்ப் புலனாய்வாளர்கள் இங்குள்ளனர். அவர்களுக்கு நன்கு சிங்களம் தெரியும். ஆகவே இவை பற்றி அதிகாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் கூறவேண்டும். வேறு நாடுகளிலெல்லாம் இவ்வாறான நிலைமைகள் இருந்தாலும் இங்கு எதிர்த்துக் கதைத்தால் வேலை பறிபோகும் நிலையுள்ளது.

சரத் வீரசேகர நீதித்துறையை தூக்கி எறிகின்றார். தமிழர்களின் பொருளாதாரத்தை வளர்க்கும் விடயங்களை இல்லாமல் செய்யும் நிகழ்ச்சி நிரலே காணப்படுகின்றது.

அதுவும் வடக்கு-கிழக்கில் சாதுரியமாக நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்துள்ளனர். நாங்களும் தொடர்ந்து போராட்டங்களை நடத்தாதுவிடின் தங்கள் நடவடிக்கைகளை சாதுரியமாக முன்னெடுப்பார்கள்.

எனவே ஆக்கிரமிப்பு நிகழ்ச்சி நிரல் தற்போதைக்கு முடிவடையாத நிலையுள்ளதால், வடக்கு கிழக்கு பகுதிகள் போராட்டக் களமாக மாற்றப்பட்டு தொடர்ந்தும் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும்-என்றார். (அ)

# பல்கலை மருத்துவ பீடங்களில் விரிவுரையாளர் பற்றாக்குறை

கொழும்பு, ஜூலை 13

மொறட்டுவை, சப்ரகமுவ மற்றும் வடமேல் ஆகிய மருத்துவ பீடங்களுக்கான இறுதியாண்டு பேராசிரியர் பிரிவுகள் இதுவரை நிறுவப்படவில்லை என மருத்துவ பீட மாணவர் செயற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

அத்துடன் அனைத்து மருத்துவ பீடங்களிலும் கடுமையான விரிவுரையாளர்கள் பற்றாக்குறை நிலவுவதாக அதன் இணைப்பாளர் நவின் தாரக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைத்து மருத்துவ பீடங்களிலும் கடுமையான விரிவுரையாளர்கள் பற்றாக்குறை நிலவுகிறது. இதற்கு இது வரை தீர்வுகள் வழங்கப்படவும் இல்லை.

புதிதாக நிறுவப்பட்ட மூன்று மருத்துவ பீடங்களை எடுத்துக்கொண்டால் மொறட்டுவை, சப்ரகமுவ மற்றும் வடமேல், மருத்துவ பீடங்களில் இன்னும் இறுதியாண்டு பேராசிரியர் பிரிவுகள் நிறுவப்படவில்லை.

இதனால் அந்த இறுதியாண்டு மாணவர்கள் இந்த வருடம் அந்த இறுதியாண்டை ஆரம்பிக்கின்றனர். இன்னும் அந்த பேராசிரியர் பிரிவுகளை ஆரம்பிக்கும் திட்டம் இல்லை. குறைந்த பட்சம் மொறட்டுவை மருத்துவ பீடத்திற்கான கட்டடம் கூட இல்லை.

மருத்துவ கல்வி இப்படி பல பிரச்சனைகளுடன் நகர்கிறது. புதிதாக மூன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளை நிறுவ அரசாங்கம் முற்சிக்கிறது. தற்போது அரசு மருத்துவமனைகளில் அது தொடர்பான மருத்துவப் பயிற்சி அளிக்க அரசு திட்டமிட்டுள்ளது-என்றார். (அ)

# வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தில் 7ஆவது குழுவை இணைப்பதற்கு அனுமதி

கொழும்பு, ஜூலை 13

அரச சாரா பல்கலைக்கழகங்களில், பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக வட்டியில்லாத மாணவர் கடன் திட்டத்தின் கீழ் 07 ஆவது குழுவை இணைத்து கொள்வதற்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

குறித்த யோசனை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி என்பன பட்டப்படிப்பை தொடர்வதற்கான முழுமையான காலப்பகுதிக்காக 13 சதவீத குறைந்த வட்டி வீதத்தின் அடிப்படையில் இந்த கடன் திட்டத்தை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின், உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில், பட்டப்படிப்பை மேற்கொள்வதற்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்குகே இவ்வாறான வட்டியில்லாத கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (அ)

# போதகர் ஜெரோம் 1 வார விரிவுரைக்கு ரூ.1.5 மில்லியனுக்கும் மேல் வருமானம்!

கொழும்பு, ஜூலை 13

இலங்கை உட்பட 8 நாடுகளைச் சேர்ந்த சுமார் 300 வர்த்தகர்களுக்கு வாரத்துக்கு ஒரு முறை வர்த்தக ஆலோசனை சேவை மற்றும் கடவுளின் ஆசீர்வாத நிகழ்ச்சியை ஒன்லைனில் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நடத்தி வருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விரிவுரையானது ஒன்லைனில் நடத்தப்படுவதுடன், இலங்கையில் உள்ள வங்கிக் கணக்கில் 210 அமெரிக்க டொலர்களை வரவு வைத்து வர்த்தகர்கள் இந்த விரிவுரையில் இணைந்து கொள்வதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்த விரிவுரையின் மூலம் மாத்திரம் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ 1.5 மில்லியன் ரூபாவுக்கு மேல் வருமானம் ஈட்டுவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பௌத்த மதத்தை அவமதிக்கும் வகையில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்ததன் பின்னர், அவர் நாட்டை விட்டு வெளியேறி இந்த விரிவுரைகளை மேற்கொண்டு வருவதுடன், இலங்கையிலுள்ள வங்கிக் கணக்கில் பணம் பழையபடி வரவு வைக்கப்பட்டுள்ளதாக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினர் கண்டறிந்துள்ளனர்.

ஜெரோம் பெர்னாண்டோ சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக இதுவரை தெரியவந்துள்ளபோதிலும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜெரோம் பெர்னாண்டோ கட்டுநாயக்க 'மிரக்கிள் டோம்' மண்டபத்தில் விரிவுரை ஆற்றிய 04 ஏக்கர் காணியின் உரிமையாளரிடமும் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

முன்னாள் பொலிஸ் அதிகாரியான இவர், தேவாலயம் கட்டுவதற்காக காணியை தானமாக வழங்கியதாக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவில் தெரிவித்துள்ளார்.

ஹோட்டல் அமைப்பதற்காக 9 கோடி ரூபாவுக்கு வாங்கிய இந்த காணி 2015ஆம் ஆண்டு ஜெரோம் பெர்னாண்டோவுக்கு வழங்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திற்கு அருகில் அமைந்துள்ள தனது தொழிற்சாலையை வெளிநாட்டவர் ஒருவருக்கு 19,000 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்துள்ளதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அந்த பணத்தில் நிலம் வாங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தொழிற்சாலையை வெளிநாட்டவருக்கு விற்றாலும், தொழிற்சாலை அமைந்துள்ள நிலம் இந்த தொழிலதிபருக்கு சொந்தமானது என்பதும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவர் மாதாந்தம் 110 இலட்சம் வாடகையாகப் பெறுவதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் இவர் கொழும்பில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்று அந்த பாடசாலைக்கு பல கோடி செலவில் நீச்சல் தடாகம்கூட கட்டியுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

ஜெரோமை பின்தொடர்பவர்களில் இதுபோன்ற பல தொழிலதிபர்கள் இருப்பதாகவும் அவர்களில் இந்த நாட்டில் உள்ள பிரபல கார் விநியோக உரிமையாளர்களும் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

பல்வேறு அரசு நிறுவனங்களில் பணிபுரியும் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் ஜெரோமின் சீடர்களில் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (அ)

# வெளிநாட்டவர்கள் 7 பேருக்கு பத்து ஆண்டு கடூழியச் சிறை!

கொழும்பு, ஜூலை 13

போதைப்பொருள் குற்றம் நிரூபிக்கப்பட்ட, வெளிநாட்டவர்கள் 7 பேருக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம், 10 ஆண்டு கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

கடந்த சில வருடங்களில், காவல்துறை போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட 2 வெவ்வேறு சுற்றிவளைப்புகளில், குறித்த சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், அவர்களுக்கு எதிராக மேல்நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அவர்களில் 5 பாகிஸ்தானியர்களும், 2 ஈரானியர்களும் அடங்குவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி கடற்படை மற்றும் காவல்துறை போதைப்பொருள் ஒழிப்பு பணியக அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது, 45 கிலோ 654 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட ஈரானியர்கள் இருவருக்கும், ஐந்து பாகிஸ்தானியர்களுக்கும், கொழும்பு மேல் நீதிமன்றம் 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

அத்துடன், 2016 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் திகதி ஒரு கிலோ 744 கிராம் கொக்கேய்னுடன் கைதுசெய்யப்பட்ட நைஜீரிய பிரஜை ஒருவருக்கு, கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை தண்டனை விதித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# 'தால முற்றம்' பனை சார் உற்பத்தி கண்காட்சி-விற்பனை நல்லூரில்!

யாழ்ப்பாணம், ஜூலை 13

ஆடிப்பிறப்பை முன்னிட்டு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் பனை,தென்னை வள அபிவிருத்தி சங்கங்கள் இணைந்து நடத்தும் 'தால முற்றம்' பனை சார் உற்பத்தி கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளது.

அது நல்லூர் சங்கிலியன் பூங்காவில் எதிர்வரும் 14 ஆம், 15ஆம்,16 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை நடைபெறவுள்ளது.

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான திருமதி தேவநந்தினி பாபு தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகாரம் மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# கொடநாடு கொலை வழக்கை கையில் எடுக்கும் ஓ.பி.எஸ்!

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

கொடநாடு கொலை வழக்கு விவகாரத்தை தமிழ்நாடு அரசு தீவிரமாக விசாரிக்க வேண்டுமெனக் கோரி போராட்டம் நடத்தப்போவதாக அதிமுகவில் தனி அணியாக செயற்பட்டுவரும் ஓ. பன்னீர் செல்வம் தரப்பு அறிவித்திருக்கிறது.

செவ்வாய்க்கிழமையன்று காலையில் அ.தி.மு.கவின் ஓ.பி.எஸ். தரப்பினர் திடீரென சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்தனர். இந்த செய்தியாளர் சந்திப்பில் ஓ. பன்னீர்செல்வம், வைத்தியலிங்கம், பண்ருட்டி ராமச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



இந்தச் செய்தியாளர் சந்திப்பில், முதலில் வைத்தியலிங்கம் ஒரு அறிக்கையை வாசித்தார். அதில் கொடநாடு வழக்கின் பின்னணியைத் தீவிரமாக விவரித்ததோடு, அதில் உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரி ஆகஸ்ட் 1ஆம் தேதி போராட்டம் நடத்தப்போவதாகவும் அறிவித்தார்.

“ஜெயலலிதா மறைவிற்கு பிறகு 2017ஆம் ஆண்டு ஏப்ரல் 24ஆம் தேதியன்று இரக்கமற்ற ஓர் அரக்கர் கூட்டம் கொடநாடு தோட்டத்திற்குள் புகுந்து அங்கே காவல் காத்து வந்த ஓம்பகதூர் என்கிற காவலாளியை கொலைசெய்து, கிருஷ்ண பகதூர் என்னும் காவலாளியை கொடுமைப்படுத்தி, கொலை - கொள்ளையை நிகழ்த்தியது.

இதற்குப் பிறகு, இந்த சம்பவத்தை திட்டமிட்டு நடத்தியதாக சந்தேகிக்கப்பட்ட ஜெயலலிதாவின் முன்னாள் கார் ஓட்டுநர் கனகராஜ், கொடநாடு பங்களாவில் சி.சி.டி.வி. மற்றும் கணினி உள்ளிட்ட பொறுப்புகளை நிர்வகித்து வந்த தினேஷ் என்ற இளைஞர், இந்தக் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டவர்களை ஏற்பாடு செய்ததாக குற்றம் சுமத்தப்பட்ட சயான் என்பவரின் மனைவி, அவரது மகள், மேலும் இந்தச் சம்பவம் நடந்த காலத்தில் கொடநாடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக இருந்தவர் உள்பட 6 பேர் சந்தேகமான முறையில் மரணமடைந்தனர்.





இந்தக் கொடூரம் நடைபெற்று ஏறத்தாழ 6 ஆண்டுகள் ஆகிவிட்டபோதும் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, தண்டிக்கப்படவில்லை, இந்தக் குற்றத்திற்கான நோக்கம், இதனைப் பின்னிருந்து இயக்கியவர்கள் யார் என்பதையெல்லாம் கண்டறிவதற்கும், அவர்களை கடுமையாக தண்டிப்பதற்கும் முறையான நடவடிக்கைகள் இதுவரை உறுதியோடு மேற்கொள்ளப்படாமல் கிடப்பில் போடப்பட்டுவிட்டன.

விசாரணை மாடங்களும் விசாரிக்கப்படும் அமைப்புகளும் மாறுகின்றனவே தவிர இந்த வழக்கின் சூத்திரதாரி யார் என்பதும், இந்தக் குற்றத்தை முன்னின்று நடத்தியவர் யார் என்ற முடிச்சும் இன்றுவரை அவிழ்க்கப்படவில்லை. செய்தித் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று, கொடநாடு கொலை, கொள்ளையில் ஈடுபட்டதாக, கைது செய்யப்பட்டு பிணையில் வெளியே வந்திருக்கும் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்களை அவர்களது வசிப்பிடங்களுக்கே சென்று கலந்துரையாடியதில் இந்த வழக்கை நீர்த்துப் போகச் செய்ய ஒருவர் தங்களிடம் வந்து பேரம் பேசியதாக அவர்கள் புகைப்படத்தைக் காட்டி அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டது. அதற்குப் பிறகும்கூட இன்று வரை எந்தவிதமான தொடர் நடவடிக்கைகளும், விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இச்சம்பவத்தில் தொடர்புடைய பல உயிர்கள் பறிபோன நிலையிலும், அந்தக் கொடூர நிகழ்வில் உயிரோடு தப்பித்து நேபாளத்திற்குச் சென்ற கிருஷ்ண பகதூர் என்கிற காவலாளியை அழைத்து வந்து, அவர் கண்ணால் கண்ட சம்பவம் குறித்து விசாரணை ஏதும் காவல் துறையால் நடத்தப்படாமல் இருப்பது அதிர்ச்சியை அளிக்கிறது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வரை சட்டமன்றத்திலும் பொது வெளியிலும் 2021 தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலும் இச்சம்பவம் குறித்து பல சந்தேகங்களை மக்கள் முன் வைத்து பேசியவர் இன்றைய முதல்வரும், அன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான மு.க. ஸ்டாலின். ஆட்சிக்கு வந்து 90 நாட்களுக்குள் கோடநாடு கொலை, கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்தி தண்டிப்போம் என்று மு.க. ஸ்டாலின் மக்களிடம் வழங்கிய வாக்குறுதியையும் நாடறியும்.



அப்படி பேசியது மட்டுமல்ல, தி.மு.கவின் தேர்தல் அறிக்கையிலும் இதனை பிரதான வாக்குறுதியாக அச்சிட்டு வழங்கியது. ஆனால், ஆட்சிக்கு வந்து ஏறத்தாழ இரண்டரை வருடங்களை தொடும் நிலையில், இன்று




வரை இந்த வழக்கின் முடிச்சு அவிழ்க்கப்படவில்லை, உண்மைக் குற்றவாளிகளும், அதற்கு காரணமான கிரிமினல் பேர்வழிகளும் தண்டிக்கப்படவும் இல்லை. இது தி.மு.கவின் மீதும் கடுமையான கோபத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

கொடநாடு கொலை, கொள்ளை குறித்து ஆளும் தி.மு.க. அரசு கூடுதல் கவனமும் முக்கியத்துவமும் கொடுக்காமல் தூங்கி வழிவதைக் கண்டித்தும், இந்த வழக்கினை விரைந்து விசாரித்து குற்றவாளிகளை தண்டிக்க நடவடிக்கை எடுக்குமாறு திமுக அரசை வலியுறுத்தியும் அ.தி.மு.கவின் சார்பில் எல்லா மாவட்டங்களிலும் ஆகஸ்ட் 1ஆம் தேதி காலை பத்தரை மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்” என்று தெரிவித்தார்.

இதற்குப் பிறகு செய்தியாளர்கள் சில கேள்விகளை எழுப்பினர். குறிப்பாக, இந்த வழக்கில் சேலம் இளங்கோவன் விசாரிக்கப்பட்டார். ஆகவே எடப்பாடி கே. பழனிசாமிக்கு இதில் தொடர்பு இருக்கும் என கருதுகிறீர்களா எனக் கேட்டபோது, “சட்டத்தின் மூலம் காவல்துறை செய்ய வேண்டிய வேலை அது. சட்டப்படி தீவிரமாக விசாரித்து அதில் சம்பந்தப்பட்டவர்களைக் கைதுசெய்ய வேண்டும். இதில் சம்பந்தப்பட்டவர்களை நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்” என்று பதிலளித்தார் ஓ. பன்னீர்செல்வம்.

நீங்கள் துணை முதல்வராக இருந்தபோது ஏன் விசாரணை நடத்தவில்லை என செய்தியாளர்கள் கேட்டபோது, “துணை முதலமைச்சருக்கு அரசில் எந்த அதிகாரமும் இல்லை. நான் வகித்த துறையில் மட்டுமே அதிகாரம் இருந்தது. சட்டம் - ஒழுங்கில் எனக்கு அதிகாரம் இருக்கவில்லை. முதலமைச்சருக்குத்தான் அந்த அதிகாரம் இருந்தது. எங்களுக்கு எந்தவித உண்மையான தகலும் கிடைக்கவில்லை” என்றார் ஓ. பன்னீர்செல்வம்.

தி.மு.க. ஆட்சி வந்துவுடன் இந்த விவகாரத்தை விசாரிக்க ஆரம்பித்தபோது, அதற்கு எதிராக நீங்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினீர்களே எனக் கேட்டபோது, “அன்றைய சூழல் அப்படி இருந்தது. அதனால் ஆர்ப்பாட்டம் செய்தோம்” என்றார் ஓ. பன்னீர் செல்வம்.

ஓ.பி.எஸ். தரப்பு செய்தியாளர்களைச் சந்தித்த சிறிது நேரத்திலேயே அ.தி.மு.கவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களைச் சந்தித்தார். “கொடநாட்டில் கொலை, கொள்ளை நடந்தவுடன் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து சிறையில் அடைத்தோம். இது குறித்து வழக்கும் நடந்தது. கொரோனா காலகட்டத்தில் வழக்கு விசாரணை நடப்பது தாமதமானது. இருந்தாலும் சாட்சிகளின் விசாரணை நடந்தது.

பிறகு, தீர்ப்பு வழங்கவிருந்த நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. தி.மு.க. ஆட்சியில் மேற்கு மண்டல காவல்துறை ஐ.ஜி. தலைமையில் விசாரணை நடந்தது. 90 சதவீத விசாரணை முடிந்துவிட்டதாக அவர் தனது அறிக்கையை செஷன்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். வழக்கு சி.பி.சி.ஐ.டி. வசம் மாற்றப்பட்டது. இப்போது ஏ.எஸ்.பி. அந்தஸ்துள்ள அதிகாரி விசாரித்து வருகிறார். 90 சதவீதம் விசாரணை முடிந்த வழக்கை மீண்டும் தி.மு.க. அரசு விசாரிக்க ஆரம்பித்தது ஏன்?” என அவர் கேள்வி எழுப்பினார்.

### கொடநாடு விவகாரத்தை கையில் எடுத்ததற்காக மறியலில் ஈடுபட்ட ஓ. பன்னீர்செல்வம்

2021ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சிக்கு வந்து சில மாதங்களில், ஆகஸ்ட் மாதம் சட்டமன்றம் நடந்துகொண்டிருந்தபோது, கொடநாடு விவகாரத்தை மீண்டும் தி.மு.க. விசாரணை நடத்துவதைக் கண்டித்து ஓ. பன்னீர்செல்வம் தலைமையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் வெளிநடப்புச் செய்தனர். சாலை மறியலிலும் ஈடுபட்டனர். “அதிகாரத்தின் மூலம் பொய் வழக்குகளைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகளை முடக்க முயற்சி நடக்கிறது” என்றும் ஓ. பன்னீர்செல்வம் குற்றம்சாட்டினார்.

இதற்கு சில மாதங்களுக்குப் பிறகு எடப்பாடி கே.பழனிசாமி தரப்பும் ஓ.பன்னீர்செல்வம் தரப்பும் பிரிந்துவிட்ட நிலையில், இப்போது தி.மு.க. இந்த வழக்கை சரியாக விசாரிக்கவில்லை எனக் கூறி போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார் ஓ. பன்னீர்செல்வம்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# போராட்டங்களுக்கான சூழ்நிலையை மீண்டும் ஏற்படுத்துவதற்கு பதிலாக......



கலாநிதி ஜெகான் பெரேரா

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட உள்நாட்டுக்கடன் மறுசீரமைப்பு செயற்திட்டத்துக்கு பிறகு பங்குச்சந்தையில் பெரிய மேம்பாடு காணப்பட்டது. ஆனால், தேசிய பொருளாதாரம் தொடர்ந்தும் ஆழமான நெருக்கடிக்குள்ளேயே இருக்கிறது. அது உற்பத்தி ஆற்றலைக் கொண்டிருப்பதாக தோன்றவில்லை. மந்த நிலையில் இருந்து வெளியே வருவதற்கு பொதுமக்களிடம் கொள்வனவு சக்தியும் இல்லை. உற்பத்திச் சங்கிலியின் உச்சமுனையில் இருக்கும் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் தங்களது பொருட்களுக்கும் சேவைகளுக்கும் பாவனையாளர்கள் மத்தியில் கிராக்கி இல்லை என்று புலம்புகிறார்கள். அவர்களின் உற்பத்திகளை வாங்குவதற்கு மக்களிடம் பணம் இல்லை.

பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னதாக தொழிற்சாலையில் இருந்து தினமும் 60 லொறிகள் வெளியே சென்ற இடத்தில் தற்போது மூன்று லொறிகளே போகின்றன அல்லது தொழிற்சாலைகள் அவற்றின் 200 ஊழியர்களில் 50 பேரைக் குறைப்புச் செய்திருக்கின்றன என்று இதற்கு உதாரணம் கூறப்படுகிறது. அரசுக்கு சொந்தமான செய்திப் பத்திரிகைகளின் விற்பனையில் கடும் வீழ்ச்சி இருப்பதாக பத்திரிகை விநியோகிப்பவர் கூறுகிறார். அலுவலகங்கள் பத்திரிகைகளை கொள்வனவு செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தன. தன்னால் பத்திரிகைகள் விநியோகம் செய்யப்பட்ட 18 அலுவலகங்களில் 15 அலுவலகங்கள் மூடப்பட்டுவிட்டன என்று அவர் விளக்கம் தந்தார்.

பொருளாதார மீட்சிக்கான சர்வதேச நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தன்னாலியன்றவரை நடவடிக்கைகளை முன்னெடுக்கிறது. பொருளாதாரத்தை உந்தித்தள்ளக்கூடிய வளங்களின் பெரியளவிலான உட்பாய்ச்சலைப் பொறுத்தவரை சர்வதேச சமூகத்தினால் மேம்பாட்டைட ஏற்படுத்தமுடியும். ஏனைய சர்வதேச பொருளாதார பங்காளர்கள் தங்களுக்கு தேவையான உறுதிமொழிகளை பெறவதற்கான சர்வதேச நியமமாக சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் விளங்குகிறது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயன்முறையில் ஈடுபடுவதன் மூலம் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தினால் வரையறுக்கப்பட்ட பொருளாதார இலக்குகளை அடைவதற்கான கடினமான பயணத்தை தொடங்கியிருக்கிறது.

வரி வருவாயை அதிகரிப்பதாக இருந்தாலென்ன அல்லது விதந்துரைக்கப்பட்ட சதவீதத்தினால் பட்ஜெட் பற்றாக்குறையை குறைப்பதாக இருந்தாலென்ன பொருளாதார நிலைபேறுக்கான இலக்குகளை சர்வதேச நாணய நிதியமே வரையறை செய்கிறது. அந்த இலக்குகளை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை இலங்கை அரசாங்கமே தீர்மானிக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. களவாடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு முயற்சியொன்றை மேற்கொள்ளாமல் அந்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முன்னெடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளின் சுமை கோர்ப்பரேட் துறையையும் அதன் ஆதரவாளர்களையும் பாதிக்காத வகையிலான பாதையையே அரசாங்கம் தெரிவுசெய்திருக்கிறது.

மறுசீரமைப்பு செயன்முறையின் பிரதான அம்சங்களில் ஒன்று முன்னைய பல தசாப்தங்களாக அரசாங்கங்களினால் பேணப்பாதுகாக்கப்பட்டு வந்த சமூக நலன்புரித் திட்டமாகும். அஸ்வேசும இருபது இலட்சம் வறிய மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. 2019 ஆண்டுக்கு பிறகு நாற்பது இலட்சம் பேர் வறுமைக்குள் வீழ்ந்துவிட்டதாகவும் தற்போது எழுபது இலட்சம் பேர் வறுமையில் வாழ்வதாகவும் லேர்ன் ஏசியாவின் **(Learning Initiatives on Reforms for Network Economies Asia - LIRNE asia)** தேசிய ஆய்வு காட்டுகிறது.

அனால் அஸ்வேசுமவின் பயனாளிகளாக யார்யார் இருக்கவேண்டும் என்பதில் உள்ளூர் மட்டத்தில் தகராறு மூண்டிருக்கும் நிலையில், பயனாளிகளைத் தெரிவுசெய்யும் செயன்முறைகள் பெருமளவு பிரச்சினையை தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கலாம். அடுத்து பெரிதாக பாதிக்கப்படுவது ஊழியர் சேமலாப நிதியமும் ஊழியர் நம்பிக்கை நிதியமுமே. இந்த ஓய்வூதிய நிதியங்கள் மீது வரி அறவிடுவதும் அவை பெறப்போகும் வட்டியில் குறைப்புச் செய்வதும் தற்போது குறைந்தளவு வேதனையையே தருகின்றது. ஆனால் பிறகு தாங்கள் பெறும்பணம் பெரிய தொகையாக இல்லை என்று ஓய்வுபெறுபவர்கள் தெரிந்துகொள்ளும் போது அது பெரிய வேதனையை தோற்றுவிக்கும்.

### குழப்பமான நிலைவரம்

தனது அரசியல் எதிரிகளாக இருந்த, தொடர்ந்தும் அரசியல் எதிரிகளாக இருக்கக்கூடிய ஆளும் கட்சி உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அரசாங்கத்துக்கு ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் தலைமைதாங்கக்கூடியதாக இருப்பதே அவரது சாதனையாகும். பெரும்பான்மையான மக்களுக்கு வேதனையைத் தரக்கூடிய பொருளாதார மறுசீரமைப்புக்கு வழிவகுக்கும் சட்டங்களை அவர்களைக் கொண்டு ஜனாதிபதி நிறைவேற்றுகின்றார். ஊழியர் சேமலாப நிதியம் 2038 ஆம் ஆண்டளவில் 12 ட்ரில்லியன் ரூபா அளவில் ( 3900 கோடி அமெரிக்க டொலர்கள் ) இழப்பைச் சந்திக்கும் என்று எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தி தலைவருமான சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியிருக்கிறார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாக ஊழியர் சேமலாப நிதியத்தினதும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தினதும் தலைவர்களுடன் கலந்தாலோசிக்கப் படவில்லை என்பது பொதுநிதிக்குழுவினால் அவர்கள் விசாரிக்கப்பட்டபோது தெரியவந்தது என்று பொருளாதார சிந்தனை நிறுவனமான வெறைற் றிசேர்ச்சினால் ( **Verite Research** ) வெளியிடப்பட்ட அறிக்கையொன்றை மேற்கோள் காட்டி பிரேமதாச கூறினார். தொழிலாளர்களுக்கு ஏற்படப்போகின்ற இழப்பை எந்த அரசாங்க நிறுவனமும் மதிப்படு செய்யவில்லை. அந்த இழப்பு 12 ட்ரில்லியன் ரூபாவுக்கும் அதிகமானதாக இருக்கும் என்று வெறைற் றிசேர்ச் அதன் மதிப்பீட்டில் கூறியிருக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தங்களது வருமானத்திற்குள் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாத நிலையில் இருக்கும் மக்கள் மத்தியில் உள்ள பொருளாதார அதிருப்தியை ஆளும் கட்சி உறுப்பினர்கள் அறிவார்கள்.அரசாங்கத்தின் குறிப்பாக ஜனாதிபதியின் செல்வாக்கு அதிகரிக்கின்றது, ஆனால் ஒட்டுமொத்தத்தில் செல்வாக்கு மட்டம் தொடர்ந்தும் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறது என்று கருத்துக் கணிப்புகள் காட்டுகின்றன.2022 அக்டோபரிலும் 2023 பெப்ரவரியில் பதிவான அரசாங்கத்தின் அங்கீகார வீதம் (10 சதவீதம் ) 2023 ஜூனில் இரண்டு மடங்காக (21 சதவீதம் ) அதிகரித்ததாக வெறைற் றிசேர்ச்சின் 'தேசத்தின் மனநிலை' **(Mood of the Nation poll)** என்ற தலைப்பிலான மிகவும் அண்மைய கருத்துக்கணிப்பு கூறுகிறது.

உள்ளூராட்சி தேர்தல்களை தற்போதைக்கு நடத்தக்கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருப்பதற்கு இதுவே காரணமாகும். நான்கு மாதங்களுக்கு முன்னர் நடத்தப்பட்டிருக்கவேண்டிய அந்த தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. மாகாண சபை தேர்தல்களும் நடத்தப்படாமல் உள்ளூராட்சி தேர்தல்களும் தொடர்ந்து காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுமோனால் அது பொறுத்துக்கொள்ள முடியாத எதேச்சாதிகாரத்தை நோக்கிய ஒரு நகர்வுக்கான அறியாக இருக்கும். இது கவலை தரும் ஒரு போக்காகும்.

இத்தகைய சூழ்நிலைகளில், அரசாங்கத்துக்கும் எதிரணிக்கும் இடையிலான துருவமயமாதல் மேலும் அதிகரிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. புதிய சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றுகின்றது. அது தனக்கிருக்கும் பாராளுமன்ற பெரும்பான்மையைப் பயன்படுத்தி புதிய தேர்தல்களை நடத்துவதற்கு பதிலாக பழைய உள்ளூாராட்சி சபைகளை மீண்டும் நடைமுறைக்கு கொண்டு வருவது, ஊடக சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவது, பயங்கரவாதத்துக்கு எதிரான சட்டத்தின் வீச்செல்லையை விரிவுபடுத்துவது போன்ற சர்ச்சைக்குரிய சட்டங்களை கொண்டுவருவதில் அரசாங்கம் நாட்டம் காட்டுகிறது. ஆனால் இந்த பாராளுமன்ற பெரும்பான்மை பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னதாக வேறுபட்ட ஒரு நேரத்தில் தெரிவுசெய்யப் பட்டதாகும்.

தற்போது அரசாங்கத்தின் செல்வாக்கு 20 சதவீத மட்டத்தில் இருக்கும் நிலையில், அரசாங்கம் செய்வதை மக்கள் ஆதரிக்கப்போவதில்லை என்பதாக அதை நோக்கமுடியும். இதனால் மக்கள் செல்வாக்கை இழந்த அரசாங்கங்களை தேர்தல்களில் மாற்றுவதற்கு நீண்டகாலமாகப் பழக்கப்பட்டுப்போன ஒரு நாட்டில் குழப்பகரமான நிலைவரம் ஒன்று தோன்றுவதற்கான ஆபத்து இருக்கிறது. மக்கள் தொடர்ந்தும் அமைதியாக இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது நியாயமானதல்ல. இன்னொரு அறகலயவுக்கு இது வழிவகுக்கக்கூடும்.

### தேவையான ஒத்துழைப்பு

பிரான்ஸ் நாட்டின் தற்போதைய நிலைவரம் மக்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளை தணிப்பதற்கு உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் இலங்கையில் நேரக்கூடியது என்ன என்பதற்கு ஒரு எச்சரிக்கையாகும். அல்ஜீரிய வம்சாவளியைச் சேர்ந்த 17 வயதான பையனை பொலிஸ் அதிகாரியொருவர் சுட்டுக்கொலை செய்ததையடுத்து பிரான்ஸில் கலவரங்களும் சூறையாடல்களும் இடம் பெற்றுவருகின்றன. இந்த சம்பவத்தினால் மக்கள் ஆவேசமடைந்திருக் கிறார்கள். இனவெறியுடன் கொடூரமான முறையில் பொலிஸார் நடந்து கொள்வதாக அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

பாரிஸ் உட்பட ஏனைய நகரங்களுக்கும் கலவரங்கள் விரைவாக பரவின. பாரிஸில் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்ட கலகக்காரர்கள் வாகனங்களுக்கும் கட்டிடங்களுக்கும் தீவைத்ததுடன் கடைகளையும் வர்த்தக நிறுவனங்களையும் சூறையாடினர். இதுவரையில் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.100 கோடி டொலர்களுக்கும் அதிகமான பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.கலகக்காரர்களில் பலர் இளைஞர்கள். பொலிசார் அதீத படைபலத்தைப் பிரயோகிப்பதாகவும் சிறுபான்மையினரை இலக்கு வைப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்ற ஒரு நாட்டில் தாங்கள் ஓரங்கட்டப்பட்டிருப்பதாக அவர்கள் உணருகிறார்கள்.

தொழில் வாய்ப்புகள் இழப்பு மற்றும் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியின் விளைவான பொருளாதார இடர்பாடுகளைத் தணிப்பதற்கு சமூக நலன்புரி உதவியாக விநியோகிப்பதற்கு அரசாங்கத்திடம் பொருளாதார வளங்கள் இல்லாதமையே தற்போது இலங்கையில்

உள்ள பிரச்சினையாகும். கடந்த வருடம் ஏழுக்கும் அதிகமான சதவீதத்தினால் சுருங்கிய தேசிய பொருளாதாரம் தொடர்ந்தும் கீழ் நோக்கிச்செல்லும் என்றும் இவ்வருடம் மேலும் மூன்று சதவீதத்தினால் சுருங்கும் என்றும் உலகவங்கி மதிப்பிடுகிறது.

தேர்தல்களுக்கு பதிலாக கலைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளை மீண்டும் செயற்படவைத்து எட்டு ஆயிரத்துக்கும் அதிகமான உறுப்பினர்களுக்கு மீண்டும் பதவிகளை கொடுப்பதற்கு அரசாங்கம் கொண்டிருக்கும் யோசனை தங்களது தொழில்களை இழந்து பொருளாதார இடர்பாடுகளில் உழலும் மக்களைச் சீற்றங்கொள்ள வைக்கும். இது ஊழல் மோசடிக்காரர்களை வீட்டுக்கு அனுப்பி முறைமை மாற்றம் ஒன்றைக்கொண்டுவர வேண்டும் என்று அறகலய கொண்டிருந்த நிறைவு செய்யப்படாத இலட்சியத்தை நினைவுபடுத்துகிறது.

அண்மையில் பொது நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களை தவறாக வழிநடத்தக்கூடிய வாதங்களை தவிர்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன் நாடு எதிர்நோக்கும் சவால்களைக் கையாள அரசாங்கத்துடன் இணையுமாறு எதிர்க்கட்சி தலைவர் தலைமையிலான முழு எதிர்க்கட்சிக்கும் அழைப்பு விடுத்தார். ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சி ஆதரவு அளிக்கக்கூடிய , ஆதரவு அளிக்க வேண்டிய ஒரு பிரச்சினை இருக்கிறது. இனநெருக்கடிக்கு தீர்வைக்கண்டு தேசிய நல்லிணக்க குறிக்கோளை அடைவதே அதுவாகும்.

அதில் வெற்றியடைய முடியுமென்றால் பெரிய அளவில் சர்வதேச ஆதரவை திரட்டக்கூடியதாக இருக்கும். இந்த விவகாரத்தில் ஜனாதிபதி மெச்சத்தக்க தொலை நோக்கையும் துணிச்சலையும் வெளிக்காட்டியிருக்கிறார். இந்த பிரச்சினைக்கு காணப்படக்கூடிய தீர்வு நாட்டை ஐக்கியப்படுத்தி இலங்கையின் எதிர்காலத்திலும் பொருளாதார முதலீடுகளிலும் சர்வதேச சமூகத்துக்கு புதிய ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு உதவும். நாம் எல்லோரும் ஒன்றிணைந்து இதைச் செய்தோம் என்று கூறும்போது வெற்றி நிச்சயமாகும்.

# சௌபாக்கியா திட்டத்தில் புதிய வீடுகள் கையளிப்பு

அக்கரைப்பற்று, ஜுலை 13

நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவில் வருமானம் குறைந்த குடும்பத்தவர்களுக்கு சமூர்த்தி சௌபாக்கியா வீடமைப்புத்திட்டத்தின் மூலம் புதிய வீடுகளை நிர்மாணித்து கையளிக்கும் நிகழ்வு நேற்று முன் தினம செவ்வாய்க்கிழமை தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சி. அன்வர் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் தலைமையில் நிந்தவூர் 23 ஆம் பிரிவில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபராக புதிதாக கடமையேற்ற சிந்தக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீடுகளை பயனாளிகளிடம் சம்பிரதாய பூர்வமாக கையளித்தார்



# புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் பேச்சுக்கு கோருகின்றது கிராம உத்தியோகத்தர்கள் சங்கம்

கொழும்பு, ஜுலை 13

தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களத்துடன், உடனடி பேச்சுவார்த்தை நடத்த, கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் கோரியுள்ளது.

சனத்தொகை மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பை மேற்கொள்ளுமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் குடியிருப்புகளை பட்டியலிடும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த முழுமையான பணிகளுக்கு, சுமார் 3 பில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், குடித்தொகை கணக்கெடுப்புக்காக, தங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு போதுமானதல்ல என இலங்கை ஐக்கிய கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அத்துல சீலமனாரச்சி தெரிவித்துள்ளார்.

2019 இல் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் வசதிகளே, தற்போதும் நடைமுறைப்படுத்தப்படுப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# கொடநாடு கொலை வழக்கை...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொடநாடு விவகாரம் குறித்து ஓ.பி.எஸ். திடீரென கவனம் செலுத்த என்ன காரணம்?

“வேறென்ன காரணம்? தி.மு.க. தூண்டுதல்தான் காரணம். அ.தி.மு.க. குறித்து மக்கள் மனதில் தவறான எண்ணத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இதைச் செய்கிறார். அவரால் அ.தி.மு.கவை நேரடியாக எதிர்க்க முடியாது என்பதால் தி.மு.கவின் பின்னால் ஒளிந்து கொண்டு இதைச் செய்கிறார்” என தெரிவித்தார் ஜெயக்குமார்.

வேறு சில காரணங்களும் சொல்லப்படுகின்றன. கடந்த ஆண்டு இதே நாளில் அதாவது, ஜுலை 11ஆம் தேதி அ.தி.மு.கவின் பொதுக்குழு கூடி, எடப்பாடி கே. பழனிசாமியை இடைக்காலப் பொதுச்செயலாளராக நியமித்தது. ஓ. பன்னீர்செல்வமும் அவரது ஆதரவாளர்களும் கட்சியைவிட்டு நீக்கப்பட்டனர். ஆகவேதான் இந்த நாளில், எடப்பாடி தரப்புக்கு நெருக்கடி கொடுக்க இந்த விவகாரத்தை அவர் கையில் எடுத்திருக்கலாம் என்கிறார்கள் சிலர். தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்திருப்பதாக, எடப்பாடி கே. பழனிசாமி ஜுலை 10ஆம் தேதியன்று அறிக்கை வெளியிட்ட நிலையில், அதற்கு அடுத்த நாளே எடப்பாடி தரப்பு மீது பரவலான சந்தேகம் விழுந்திருக்கும் ஒரு சம்பவத்தை ஓ.பி.எஸ். கையில் எடுத்திருப்பதுதான் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

**தொடர் பின்னடைவு காரணமா?**

“கடந்த ஒரு வருடமாகவே ஓ. பன்னீர்செல்வம் தரப்பு அமைப்பு ரீதியாக பின்னடைவைச் சந்தித்து வருகிறது. அவர் கட்சியைவிட்டு நீக்கப்பட்ட இந்த ஒரு வருடத்தில், எடப்பாடி தரப்பிலிருந்து பெரிய எண்ணிக்கையில் யாரும் இவர் பக்கம் வரவில்லை. இந்த நிலையில், இந்த வழக்கு துரிதப்படுத்தப்பட்டு, அதன் மூலம் எடப்பாடி தரப்புக்கு சிக்கல் வந்தால், ஆட்கள் தன் பக்கம் வரலாம் எனக் கருதுகிறார் ஓ. பன்னீர்செல்வம். ஆனால், அந்த வழக்கும் அவ்வளவு விரைவாக நகர்வதைப் போலத் தெரியவில்லை. தி.மு.க. தூண்டுதலில் இந்த விஷயத்தை ஓ. பன்னீர்செல்வம் கையில் எடுத்திருக்க மாட்டார். ஆனால், ஒரு அழுத்தம் கொடுத்து அதனால், வழக்கு துரிதமடைந்தால் நல்லது என்று அவர் கருதியிருக்கக் கூடும்” என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ப்ரியன்.

பத்திரிகையாளர் ப்ரியன் சொல்வதைப் போல ஓ. பன்னீர்செல்வம் தரப்பைப் பொறுத்தவரை, தொடர்ந்து பின்னடைவையே சந்தித்துவருகிறது. அ.தி.மு.க. மீதான உரிமை விவகாரத்தில், ஒரே ஒரு உரிமையியல் வழக்கைத் தவிர, மற்ற வழக்குகள் அனைத்தும் எடப்பாடி தரப்புக்கே சாதகமாக முடிந்திருக்கின்றன.

மேலும், எடப்பாடி தரப்பு அறிவித்த அ.தி.மு.க. நிர்வாகிகள் பட்டியலை தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டிருக்கும் செய்திகளும் தற்போது வெளியாகியிருக்கின்றன. மேலும், ஜுலை 15ஆம் தேதி நடக்கவுள்ள பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சிகள் கூட்டத்திற்கு எடப்பாடி தரப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. ஓ. பன்னீர்செல்வம் தரப்புக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. கிட்டத்தட்ட பா.ஜ.கவும் தன்னைக் கைவிட்டுவிட்டதாக பன்னீர்செல்வம் தரப்பு கருதுகிறது. இந்தப் பின்னணியில்தான் செய்தியாளர்களைச் சந்தித்து, கொடநாடு விவகாரத்தைக் கையில் எடுத்திருக்கிறார் ஓ.பி.எஸ்.





# 40 நாட்களுள் கனகர் கிராமக் காணிகள் மக்களுக்கு பகிரந்தளிக்கப்படவேண்டும்!

## கிழக்கு மாகாண ஆளுநர் பணிப்பு

காரைதீவு, ஜுலை 13

“33வருடங்களாக காடுமண்டி மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த பொத்துவில் கனகர் கிராம மக்களது காணிகள் எதிர்வரும் 40 தினங்களுள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்.”

-இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணியளவில் கனகர் கிராமத்தில் வைத்து தெரிவித்தார்.



ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று அம்பாறை மாவட்டத்திற்கு விஜயம் செய்தவேளை சர்ச்சைக்குரிய கனகர் கிராமத்திற்கும் சென்றார்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் பெருமாள் பார்த்தீபன் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன் பொத்துவில் பிரதேச செயலாளர் உள்ளிட்ட பிரமுகர்கள் அங்கு சமுகமளித்திருந்தனர்.

கடந்த இரு மாதங்களாக இப் பிரதேசம் ஜேசிபி இயந்திரம் மூலம் துப்பரவாக்கப்பட்டு வருகிறது.

பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் அரச அனுமதியுடன் இப் பணியில் ஈடுபட்டு வந்தார்.

அங்கு உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் கூறுகையில்-

இங்கு வாழ்ந்து வந்த மக்கள் 1985 இற்கு பின்னர் யுத்தத்தில் இடம்பெயர்ந்தனர்.

வாழ்ந்த 226 பேரில் முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்படவிருக்கிறது.

எம்மைப் பொறுத்தவரை அனைவருக்கும் இக் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும்-என்றார்.

ஆளுநர் செந்தில் தொண்டமான் அந்த இடத்திலேயே உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை எடுத்து இன்னும் நாற்பது நாட்களில் இக் காணிகள் பூரணமாக துப்பரவாக்கப்பட்டு உரிய சகல மக்களுக்கும் பகிர்ந்தளிக்க பட வேண்டும் என்று கட்டளை இட்டார்.

கூடியிருந்த மக்கள் சந்தோசத்தில் கைதட்டி ஆரவாரம் செய்தனர். (அ)



தம்பிலுவில் கலைமகள் வித்தியாலய ஆலையடிப் பிள்ளையார் ஆலய வருஷாபிஷேகம் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. (அ)



# மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

திருமலை, ஜுலை 13

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிண்ணியா விபுலானந்த வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 56 பாடசாலை மாணவர்களுக்கும், திருகோணமலை பாரதி தமிழ் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் 50 மாணவர்களுக்கும் இணைந்த கரங்கள் அமைப்பினால் கற்றல் உபகரணங்கள் மற்றும் புத்தகப்பை என்பன வழங்கப்பட்டன. (அ)



# தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி வழங்கும் நிகழ்வு

அக்கரைப்பற்று, ஜுலை 13

சாய்ந்தமருதில் ஹஜ் பெருநாளை முன்னிட்டு, சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஸதகா புல்லட்டின் மற்றும் பெமிலி ரிலீப் நிறுவனங்களின் பணிப்பாளரும் பொறியியலாளருமான எம்.சி.கமல் நிஷாத் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கினார். (அ)

# அதாஉல்லா தலைமையில் இடம்பெற்றது அக்கரைப்பற்று ஒருங்கிணைப்பு கூட்டம்

அக்கரைப்பற்று, ஜுலை 13

அக்கரைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேசிய காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல்.எம். அதாஉல்லா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரதேச செயலாளர் ரீ.எம். எம் அன்ஷார் (நளீமி) ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக கேட்போர் மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாநகர மற்றும் பிரதேச சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், பள்ளிவாசல் தலைவர்கள். சமூக அமைப்புக்களின் பிரதானிகள் மற்றும் அரச அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் பல்வேறு வகையான பிரச்னைகளுக்கு ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு காத்திரமான தீர்வுக்கள் எட்டப்பட்டன.

அக்கரைப்பற்று கல்விக் கோட்டத்தில் காணப்படும் பாடசாலைகளில் நிலவும் பிரச்னைகள் ஆராய்ந்து நிரந்தரமான தீர்வு ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துதல், வெள்ள அனர்த்தங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு வழிமுறைகள் இனங்காணப்படுவதுடன், ஆறுகள் வடிகால்கள் முறையாக பராமரிக்கப்படுவதற்கு தேவையான முன்மொழிவுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் முன்வைக்க வேண்டுமென இணைப்புக் குழுத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

அக்கரைப்பற்றில் அரச அலுவலகங்களுக்கான இடப்பற்றாக்குறை காணப்படுவதாக திணைக்களத் தலைவர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

விவசாயக் காணிகளிலிருந்து அதி உச்சப்பயனை பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய்ந்ததுடன் வேளாண்மை செய்வது தொடர்பாகவும் மேற்படி கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

விவசாய வீதிகளினை புனரமைத்தல், நீர்ப்பாசன மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துதல், சுத்தமான குடிதண்ணீர் வழங்குதல் போன்ற மக்களின் அத்தியவசிய தேவைகளை விஸ்தரிப்பு செய்வது தொடர்பாகவும் கலந்து கொண்ட திணைக்களத் தலைவர்களினால் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டது. (அ)

# மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் செயலமர்வு

மட்டக்களப்பு, ஜுலை 13

காத்தான்குடியில் பல்கலைக்கழக மாணவர்கள மற்றும் உயர்தரம் கற்று வெளிநாட்டு வேலை வாய்ப்பை எதிர் பார்த்திருக்கும் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் உயர் கல்வி ஆலோசனை செயலமர்வொன்று நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் இலங்கைக்கான சவூதிஅரேபிய தூதுவர் பி.எம். எம்.அம்சா கலந்துகொண்டு சவால் மிக்க தொழில் சந்தையில் காணப்படும் தொழில் வாய்ப்புக்கள் எதிர் பார்த்திருக்கும் சவூதி அரேபியாவில் காணப்படும் தொழில் வாய்ப்புக்கள் தொடர்பாகவும் கருத்துக்களை தெரிவித்ததுடன் உயர் கல்விக்கான ஆலோசனைகளையும் வழங்கினார். (அ)

# குடிதண்ணீர் விற்பனை தடை

அம்பாறை, ஜுலை 13

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட உணவகங்கள், ஹோட்டல்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் விற்பனை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். நிபாஸ் புதன்கிழமை தெரிவித்தார்.

ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் ஆகியவற்றில் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இக் குடிதண்ணீரை அருந்துந்துவதால் உடல்நலத்திற்கு உகந்தது அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு வரும் பொதுமக்கள் கிணறுகள், குழாய்கள் மூலம் பெறப்படும் நீரை அருந்துமாறு அவர் கேட்டுள்ளார்.

அக்கரைப்பற்று, சம்மாந்துறை, பொத்துவில் மற்றும் கல்முனை ஆகிய நகர் பிரதேசங்களிலுள்ள உணவு கையாளும் நிலையங்கள் மற்றும் உணவகங்கள் பொதுச்சுகாதார பரிசோதகர் குழுவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் விற்பனை தொடர்பாக சுகாதார பரிசோதகர் குழுவினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு பரிசோதனைக் குழுவின் அறிவுரைக்கமைய அதற்கெதிராக செயற்படுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (அ)

# நேட்டோவின் முடிவால் ஜெலன்ஸ்கி விரக்தி!

கீவ், ஜூலை 13

**நேட்டோ இராணுவக் கூட்டணியில் உக்ரைன் எதிர்காலத்தில் சேர முடியும் என்று கூறியுள்ள நேட்டோ தலைவர்கள், உக்ரைன் உனடியாக நேட்டோவில் இணைவதை நிறுத்தி வைத்துள்ளனர்.**

**இந்த நடவடிக்கை, உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை கடுமையான விரக்தி, கோபத்துக்குள்ளாக்கியுள்ளது.**

31 உறுப்பு நாடுகளின் தலைவர்கள் செவ்வாயன்று லிதுவேனியாவின் தலைநகரான வில்னியஸில் இரண்டு நாள் உச்சிமாநாட்டைத் தொடங்கியபோது, உக்ரைன் விவகாரம் அறிவிக்கப்பட்டுள்ளது.




"உக்ரைனின் எதிர்காலம் நேட்டோவில் உள்ளது" என்று தலைவர்கள் ஒரு பிரகடனத்தில் தெரிவித்தனர். ஆனால் அவர்கள் செயல்முறைக்கு எந்த காலக்கெடுவையும் வழங்கவில்லை.

"கூட்டணிகள் ஒப்புக்கொண்டு நிபந்தனைகள் நிறைவேற்றப்படும்போது கூட்டணியில் சேர உக்ரைனுக்கு அழைப்பு விடுக்கும் நிலையில் நாங்கள் இருப்போம்" என்று நிபந்தனைகளைக் குறிப்பிடாமல் அறிவிப்பு கூறியது.

உக்ரைனை நேட்டோவில் இணைப்பதற்கு உள்ள தடைகளை அகற்ற, உக்ரைன் உறுப்பினர் செயல்திட்டம் என்று அழைக்கப்படும் திட்டத்தை இம்முறை கூட்டத்தில் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அந்த திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

ஜெலன்ஸ்கி நேட்டோ தலைவர்களை ஒரு ருவிட்டர் பதிவில் விமர்சித்திருந்தார்.

பெப்ரவரி 2022 இல் ரஷ்யா படையெடுப்பை ஆரம்பிப்பதற்கு முன்பே, பாதுகாப்பு உத்தரவாதங்களுடன் பிணைக்கப்பட்ட விரைவான நேட்டோ அங்கத்துவத்துக்கு உக்ரைன் அழுத்தம் கொடுத்து வருகிறது.

கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நேட்டோ உறுப்பினர்கள் உக்ரைனின் அழைப்பை ஆதரித்தனர். உக்ரைனை நேட்டோவின் பாதுகாப்பு குடையின் கீழ் கொண்டு வருவதே ரஷ்யாவை மீண்டும் தாக்குவதைத் தடுக்க சிறந்த வழி என்று வாதிட்டனர்.

அமெரிக்கா மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகள் நேட்டோவை ரஷ்யாவுடன் நேரடி மோதலுக்கு இழுத்துவிடக்கூடும் என்று அஞ்சும் எந்த நடவடிக்கையிலும் எச்சரிக்கையாக இருந்தன.

நேட்டோவில் தற்போது 31 நாடுகள் அங்கம் வகிக்கும் நிலையில், உக்ரைன் விவகாரத்தில் அந்த நாடுகளுக்கிடையில் இணக்கப்பாடு ஏற்படாமல் போயுள்ளது. (அ)



# தாய்லாந்தை உலுக்கிய பிரபல செல்வந்தரின் கொடூர கொலை!

## அதிர்ச்சியில் உலக நாடுகள்

பாங்கொக், ஜூலை 13

தாய்லாந்தில் ஜேர்மனியைச் சேர்ந்த பிரபல செல்வந்தர் ஒருவர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு, அவரது சடலம் துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த சம்பவம் உலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

ஹான்ஸ்-பீட்டர் ரால்டர் மேக் என்ற 62 வயதான நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

தாய்லாந்தின் பட்டயா நகரில் தனது 24 வயதான மனைவியுடன் வசித்து வந்த மேக், கடந்த 4ஆம் திகதி வியாபார விடயமாக வெளியே சென்றுள்ள நிலையில் நீண்ட நாட்களாகியும் வீடு திரும்பவில்லை எனஅவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அவரது வங்கிக் கணக்கில் இருந்து சந்தேகத்திற்கிடமான வகையில் அதிக பணம் எடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இந்நிலையில் மேக் பயன்படுத்திய கறுப்பு நிற பென்ஸ் காரானது நாங் ப்ரூ நகரில் உள்ள அவரது வாடகை வீட்டுக்கு அருகே நிறுத்திவைக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்துப் பொலிஸார் குறித்த வீட்டுக்குள் சென்று சோதனை மேற்கொண்ட போது அங்கிருந்த குளிர்சாதனப் பெட்டியொன்றில் இருந்து துண்டு துண்டுகளாக வெட்டப்பட்டு பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்டிருந்த மேக்கின் சடலத்தைக் கண்டு பொலிஸார் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதனையடுத்து அவரது சடலத்தைக் கைப்பற்றிய பொலிஸார், கொலையாளி யார் என்பது குறித்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# பல்பொருள் அங்காடியில் துப்பாக்கிப் பிரயோகம்!

## மெக்சிக்கோவில் 9 பேர் உயிரிழப்பு



மெக்சிக்கோ சிற்றி, ஜூலை 13

பிரபல பல்பொருள் அங்காடி மீது மர்ம நபர்கள் சிலர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், 9 பேர் உயிரிழந்த சம்பவம் மெக்சிகோவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மெக்சிக்கோவின் டொலுகா நகரில் உள்ள பல்பொருள் அங்காடியொன்றிலேயே நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று விற்பனை நிலையத்திற்குள் புகுந்த மர்ம நபர்கள் அங்கிருந்தவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இத்தாக்குதலில் 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முன் விரோதம் காரணமாகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

# ஐரோப்பிய நாடுகளில் ஒரே ஆண்டில் வெப்பத்தினால் 61,000 பேர் உயிரிழப்பு


பிரஸ்சல்ஸ், ஜூலை 13

ஐரோப்பிய நாடுகளில் கடந்த ஆண்டு மாத்திரம் வெப்பத்தினால் 61,000 பேர் உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சியூட்டும் தகவல் வெளியாகியுள்ளது.

உலக நாடுகள் அனைத்தும் காலநிலை மாற்றத்தால் இயற்கை பேரழிவுகளை சந்தித்து வருகின்றன.

ஒரு புறம் அதீத மழையால் ஏற்படும் வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி மக்கள் உயிரிழக்கும் நிலையில், மற்றொரு புறம் வெப்பம் தாங்காமல் மக்கள் மரணிக்கின்றனர்.

இந்நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் 35 நாடுகளில் கடந்த ஆண்டு கோடைக்காலமான மே 30 முதல் செப்ரெம்பர் 4 வரை வெப்பத்திற்கு பலியானோரின் எண்ணிக்கை குறித்து பார்சிலோனா இன்ஸ்டிரியூட் போ குளோபல் ஹெல்த் ஆய்வு ஒன்றை நடத்தியது.



இந்த ஆய்வில், குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டும் 61,000-க்கும் அதிகமானோர் பலியானது தெரியவந்துள்ளது. அதிகபட்சமாக ஜூலை 18 முதல் 24 வரையில் மட்டும் 11,637 பேர் உயிரிழந்துள்ளனர்.

பெரும்பாலானோர் இத்தாலி, கிரீஸ், ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் 80 வயதைக் கடந்த பெண்கள். இளம் வயதினரை பொறுத்தவரை ஆண்களே அதிகளவில் உயிரிழந்துள்ளனர்.

வெப்பத்தை தாங்க முடியாமல், இதயம், நுரையீரல் தொடர்பான கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டு பலர் உயிரிழந்துள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

கடந்த 2003-ஆம் ஆண்டு ஐரோப்பிய ஒன்றியத்தில் ஏற்பட்ட வெப்பத்தால் 70,000 பேர் பலியானதைத் தொடர்ந்து, கோடை காலங்களை சமாளிக்க பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும், கடந்த ஆண்டு 61,000 பேர் பலியாகியுள்ளனர்.

மேலும், காலநிலை மாற்றம் தொடரும் பட்சத்தில் வெப்பம் தாங்காமல் உயிரிழப்போரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கும் என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டை பொறுத்தவரை ஏற்கெனவே ஜூலை முதல் வாரம், உலகின் அதிக வெப்பம் பதிவான வாரமாக உலக வானிலை மையம் அறிவித்துள்ளது. (அ)

# இகா ஸ்வியாரெக்கை வீழ்த்தி அரையிறுதியில் ஸ்விட்டோலினா




லண்டன், ஜூலை 13

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் முதல் நிலை வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக்கை வீழ்த்தி அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார் உக்ரைன் வீராங்கனை எலினா ஸ்விட்டோலினா.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் 4ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலாவை வீழ்த்தினார் செக்குடியரசின் மார்கெட்டா வோண்ட்ரூசோவா.

லண்டனில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் 4ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா, 42ஆம் நிலை வீராங்கனையான செக் குடியரசின் மார்கெட்டா வோண்ட்ரூசோவாவை எதிர்த்து விளையாடினார்.

இதில் முதல் செற்றை வோண்ட்ரூசோவா 6-4 என கைப்பற்றினார். இதற்கு 2வது செற்றில் பதிலடி கொடுத்த ஜெசிகா பெகுலா அந்த செற்றை 6-2 என தன்வசப்படுத்தினார்.

வெற்றியை தீர்மானித்த 3ஆவது செற்றை வோண்ட்ரூசோவா சிறப்பாக விளையாடி 6-4 கைப்பற்றினார். முடிவில் ஒரு மணி நேரம் 55 நிமிடங்கள் நடைபெற்ற மோதலில் வோண்ட்ரூசோவா 6-4, 2-6, 6-4 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி போட்டியில் முதல் நிலை வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாடெக், 76ஆம் நிலை வீராங்கனையான உக்ரைனின் எலினா ஸ்விட்டோலினாவை எதிர்கொண்டார். 2 மணிநேரம் 50 நிமிடங்கள் நடைபெற்ற இந்தப் போட்டியில் எலினா ஸ்விட்டோலினா 7-5, 6-7 (5-7), 6-2 என்ற செற் கணக்கில் ஸ்வியாரெக்கை வீழ்த்தி அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)



# எனது மனநிலையும் உறுதியும் மாறாது!

மியாமி, ஜூலை 13

எனது மனநிலையும் என் உறுதியும் மாறப்போவதில்லை. நான் எங்கிருந்தாலும், எனக்காகவும் அணிக்காகவும் அதிகபட்ச உழைப்பை கொடுக்க முயற்சிப்பேன் - என்று கூறியிருக்கிறார் லயனல் மெஸ்ஸி.

உதைபந்தாட்ட உலகின் சிறந்த வீரரும் ஆர்ஜென்ரீனா அணியின் தலைவருமான லயனல் மெஸ்ஸி பிரான்ஸின் பாரிஸ் சென். ஜெர்மைன் (பி. எஸ். ஜி.) அணிக்காக கடந்த 2 ஆண்டுகளாக விளையாடி வந்தார். பி. எஸ். ஜி. அணியுடன் எற்பட்ட பிரச்னை காரணமாக அந்த அணியில் இருந்து விலகி அமெரிக்காவின் இண்டர் மியாமி அணிக்காக விளையாடவுள்ளார்.

இந்நிலையில் அமெரிக்காவில் இண்டர் மியாமி வீரராக அவரை அறிமுகப்படுத்த அணியின் நிர்வாகம் சிறப்பு நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. அதில் பங்கேற்பதற்காக மெஸ்ஸி அமெரிக்கா சென்றுள்ளார். அங்கு அவர் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டி அளித்தார். அதில்,

“நான் எடுத்த முடிவில் மகிழ்ச்சியடைகிறேன். புதிய சவாலை எதிர்கொள்ள தயாராகவும் ஆர்வமாகவும் இருக்கிறேன். எனது மனநிலையும் என் உறுதியும் மாறப்போவதில்லை. நான் எங்கிருந்தாலும், எனக்காகவும் அணிக்காகவும் அதிகபட்ச உழைப்பை கொடுக்க முயற்சிப்பேன். உயர்ந்த தரத்தில் தொடர்ந்து செயல்படுவேன்“ என்று கூறினார்.

மெஸ்ஸி இண்டர் மியாமி அணியில் முன்னாள் பார்சிலோனா அணி வீரர் செர்ஜியோ புஸ்கெட்ஸ் மற்றும் ஆர்ஜென்ரீனாவின் முன்னாள் பயிற்சியாளர் ஜெரார்டோ மார்டினோவுடன் மீண்டும் இணையவுள்ளார்.

மெஸ்சி இண்டர் மியாமி அணி வீரராக முதல் போட்டியில் வரும் 21 ஆம் திகதி விளையாடுவார். (ஐ)

# நியூசிலாந்து மகளிரை வீழ்த்தி இலங்கை மகளிர் அணி சாதனை

கொழும்பு, ஜூலை 13

நியூசிலாந்து மகளிர் அணி 3 ஒருநாள் போட்டி 3 இருபது - 20 போட்டிகளில் விளையாடுவதற்காக இலங்கை சென்றது.

முதலில் நடந்த ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை அணி கைப்பற்றியது. இதனையடுத்து இருபது - 20 தொடர் நடைபெற்றது.

முதல் இரண்டு போட்டிகளில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று தொடரை கைப்பற்றியது. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான மூன்றாவது மற்றும் கடைசி இருபது - 20 போட்டி நேற்று தொடங்கியது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி 20 ஓவர் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 140 ஓட்டங்கள் எடுத்தது.

இதனையடுத்து 141 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற களமிறங்கிய இலங்கை பெண்கள் அணி 14.3 ஓவரில் 143 ஓட்டங்கள் எடுத்து 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் இருபது - 20 போட்டிகளில் முதன் முறையாக நியூசிலாந்து அணியை வீழ்த்தி வரலாற்று வெற்றியை இலங்கை அணி பதிவு செய்துள்ளது.

அதிரடியாக விளையாடி இலங்கை பெண்கள் அணியின் தலைவர் சமரி அத்தபத்து 80 ஓட்டங்கள் எடுத்து ஆட்டநாயகி விருதை தட்டிச்சென்றார்.






# பாக். - இந்தியா போட்டி இலங்கையில் நடக்கும்

## ஆசிய கிண்ண அட்டவணை இறுதி

புதுடில்லி, ஜூலை 13

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஒகஸ்ட் 31ஆம் திகதி முதல் செப்ரெம்பர் 17ஆம் திகதி வரை நடைபெறும் என ஆசிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்தப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம் உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

இதனிடையே, பாகிஸ்தானில் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெற்றால் அதில் பங்கேற்க மாட்டோம் என பி. சி. சி. ஐ. அறிவித்திருந்தது. இந்நிலையில், இந்தியா, பாகிஸ்தான் இடையேயான ஆசிய கோப்பை போட்டிகள் இலங்கையில் நடைபெறும் அருண் துமால் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அருண் துமால் கூறுகையில், ஆசிய கோப்பைக்கான அட்டவணை இறுதி செய்யப்பட்டது. பாகிஸ்தானில் லீக் கட்டத்தில் 4 போட்டிகள் இருக்கும். இலங்கையில் இந்தியா, பாகிஸ்தான் போட்டி உள்பட 9 போட்டிகள் இருக்கும். இரு அணிகளும் இறுதிப் போட்டியில் விளையாடினால் மூன்றாவது போட்டி நடக்கும் என தெரிவித்தார்.

2010ஆம் ஆண்டைப் போலவே இலங்கையின் தம்புள்ளையில் பாகிஸ்தானுடன் இந்தியா விளையாடும். பாகிஸ்தானில் அந்த அணி நேபாளத்துக்கு எதிராக மோதுகிறது. ஆப்கானிஸ்தான்- பங்களாதேஷ், பங்களாதேஷ் - இலங்கை மற்றும் இலங்கை - ஆப்கானிஸ்தான் ஆகியவை பாகிஸ்தானில் நடைபெறும் மற்ற 3 போட்டிகள் ஆகும். (ஐ)

# ஜோகோவிச், சின்னர் அரையிறுதிக்கு தகுதி



லண்டன், ஜூலை 13

ஜோகோவிச், சின்னர் ஆகியோர் விம்பிள்டன் தொடரின் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றாகவும், மிக உயரியதாக மதிப்பிடப்படும் விம்பிள்டன் ரென்னிஸ் தொடர் லண்டனில் நடக்கிறது.

இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி சுற்று போட்டியில் தரவரிசையில் 2ஆவது இடம் வகிக்கும் சேர்பியாவின் ஜோகோவிச் 7ஆம் நிலை வீரர் ரஷ்யாவின் ஆண்ட்ரே ரூப்லேவுடன் மோதினார்.

ஜோகோவிச் முதல் செற்றை இழந்தார். சுதாரித்த அவர் அடுத்த 3 செற்களையும் கைப்பற்றி அசத்தினார். இறுதியில் ஜோகோவிச் 4-6, 6-1, 6-4, 6-3 என்ற செற் கணக்கில் வென்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி போட்டியில் இத்தலி வீரர் ஜானிக் சின்னர், ரஷ்ய வீரர் ரோமன் சபியுலினுடன் மோதினார். இதில் சின்னர் 6-4, 3-6, 6-2, 6-2 என்ற செற் கணக்கில் வென்று அரையிறுதி சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

# சு.கவின் தலைமைப்பதவி மீண்டும் சந்திரிகா வசம்?

## முக்கியஸ்தர்கள் சிலர் தீவிர முயற்சி

கொழும்பு, ஜூலை 13

**வீழ்ந்து கிடக்கும் சுதந்திரக் கட்சியைக் கட்டியெழுப்புவதற்குச் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் கட்சியில் இணையவேண்டும் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் கருதுவதால் அதற்கான நகர்வில் அவர்கள் ஈடுபட்டுள்ளார்கள் என்று அறியமுடிகின்றது.**

முதலில் சந்திரிகாவுக்கும் சு.கவின் தலைவர் மைத்திரிக்கும் இடையில் இருக்கின்ற மனக்கசப்பை நீக்கவேண்டும். அது நடந்தால்தான் சந்திரிகாவை மீண்டும் கட்சியில் இணைப்பது சாத்தியம். இதனால் இதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது.

மைத்திரியை 2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவுக்கு எதிராக இறக்கி அவரை ஜனாதிபதியாக்கியதில் பெரும் பங்கு சந்திரிகாவுக்கு உண்டு.

ஆனால், மக்கள் ஆணைக்கு மாறாக 2017 இல் மகிந்தவை மைத்திரி பிரதமராக்கியதில் இருந்து சந்திரிகாவுக்கு மைத்திரியுடன் மனக்கசப்பு ஏற்பட்டது.

2019 ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபயவுக்கு ஆதரவு வழங்குவதற்குச் சுதந்திரக் கட்சி முடிவெடுத்ததால் அந்த மனக்கசப்பு மேலும் வலுவடைந்தது.

மைத்திரியை வெளிப்படையாகவே விமர்சிக்கத் தொடங்கினார் சந்திரிகா.

இருந்தும், சுதந்திரக் கட்சி வீழ்ந்துவிட்டது. அதைக் கட்டியெழுப்புவதென்றால் சந்திரிகா கட்சியில் இருக்க வேண்டும் என்று கட்சியின் முக்கியஸ்தர்கள் இப்போது கருதுவதால் அவரை இணைப்பதற்கான நடவடிக்கையில் அவர்கள் இறங்கியுள்ளனர். எனினும், சந்திரிகா அம்மையார் இதற்கு சம்மதிப்பாரா என தெரியவில்லை. (அ)

# யானையை கொன்று புதைத்தவர் கைது!

கொழும்பு, ஜூலை 13

அம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளுத்வெவ கிளிபுன்ன பகுதியில் வயல் வெளியில் காட்டு யானையை வெடி வைத்து கொன்று, அதனை வயல் வெளியில் புதைத்த குற்றச்சாட்டில் வனஜீவராசி அதிகாரிகளினால் 65 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரிடம் இருந்து உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று வன ஜீவராசி அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக வன ஜீவராசி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த சந்தேக நபரை வெள்ளவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக வன ஜீவராசிகள் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சுவீடனில் குர்ஆன் எரிப்பு; கண்டிக்கின்றார் ரணில்!

கொழும்பு, ஜூலை 13

சுவீடனில் குர்ஆன் எரிக்கப்பட்டமைக்கு கண்டனம் வெளியிட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இது மத சுதந்திரத்தை மீறும் செயல் எனவும் தெரிவித்துள்ளார்.

தெற்கின் பூகோள விழுமியங்களை மதிக்குமாறும், கருத்துச் சுதந்திரம் என்ற போர்வையில் அமைதியின்மைக்கு இடமளிக்க வேண்டாம் என்றும் மேற்கத்திய நாடுகளிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# பஸ்களுக்கான தண்டப்பணம் 5 இலட்சம் ரூபா வரை உயரும்!

## பந்துல குணவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 13

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய ஆகிய மாகாணங்களில் பெருந்தொகையான பஸ்கள் அனுமதிப்பத்திரங்களின்றி போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இவ்வாறான குற்றங்களுக்கு விதிக்கப்படும் 10,000 ரூபா தண்டப் பணத்தை 5 இலட்சம் ரூபா வரையில் அதிகரித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தை திருத்துவதற்கு யோசனை முன்வைத்து சட்டமா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னம்பிட்டி பஸ் விபத்து தொடர்பில் எங்களின் கவலையை தெரிவித்துக்கொள்கிறோம். சாரதியின் கவனயீனம் காரணமாகவே இந்த உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அறிக்கை கமைய, இந்த பஸ் தேசிய போக்கவரத்து ஆணைக்குழுவில் அனுமதிப் பத்திரத்தை பெற்றிருக்க வில்லை என்பதும் கிழக்கு மாகாண சபையினால் 2008 ஆம் ஆண்டு அனுமதிப் பத்திரம் வழங்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த அனுமதிப் பத்திரத்தின் உரிமையாளர் இதற்கு முன்னர் 2009 ஆம் ஆண்டு 10,000 ரூபா தண்டப் பணத்தையும் செலுத்தியுள்ளார். அதன் பின்னரே தற்போது இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதுபோன்ற விபத்துச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகம் பதிவாகுவதால், இவ்வாறான குற்றங்களுக்கு விதிக்கப்படும் 10,000 ரூபா தண்டப் பணத்தை 5 இலட்சம் ரூபாவரை அதிகரித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தை திருத்துதல் உள்ளிட்ட மேலும் சில திருத்தங்களை மேற்கொள்ளுமாறு யோசனைகளை முன்வைத்து சட்டமா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளேன்.

முச்சக்கரவண்டி, பாடசாலை வான், அலுவலக வாகனங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தையும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு பெற்றுக் கொடுக்கும் வகையில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறும் சட்டமா அதிபருக்கு யோசனை முன்வைத்துள்ளேன்.

வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய ஆகிய மாகாணங்களில் பெருந்தொகையான பஸ்கள் அனுமதிப் பத்திரங்களின்றி போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இரகசிய பொலிஸார், பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் அந்தப் பிரதேசங்களில் இருக்கும் மக்கள் வழங்கும் தகவல்களுக்கமைய பஸ்ஸில் பயணிக்கும் போதே சம்பந்தப்பட்ட இடங்களில் பணத்தை வீசிச் செல்லும் சந்தர்ப்பங்களும் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு, கிழக்கிலிருந்து வரும் பஸ்கள் பணத்தை வீசிவிட்டு செல்வதாக பல்வேறு முறைப்பாடுகள் காணப்படுகின்றன.

இதுதொடர்பில் அமைச்சரவைக்கும் அறிவித்திருக்கிறேன். இவ்வாறான முறையற்ற செயற்பாடுகள் சகலதையும் ஒழுங்குபடுத்தும் வகையில் சட்டத்தை உருவாக்குமாறு அமைச்சரவைக் யோசனை முன்வைத்துள்ளேன். முறையற்ற தற்காலிக அனுமதிப் பத்திரங்களை கொண்டவர்களுக்கு 30,000 ரூபாவிலிருந்து 30 இலட்சம் ரூபா வரையில் தண்ட பணம் விதிப்பதற்கான அமைச்சரவை பத்திரமொன்றையும் சமர்ப்பித்துள்ளேன்.

ஆனால் அதனை அமைச்சரவை அனுமதிக்கவில்லை. பல்வேறு யோசனைகளை முன்வைத்தார்கள். அதன் பிரகாரம் புதிய விதிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன-என்றார். (அ)

# ரணிலின் இந்திய பயணம் இரு தரப்பு உறவில் நேர்மறையான மாற்றப் புள்ளியாக அமையும்!

## கூறுகிறார் வினய் மோஹன் குவத்ரா

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயமானது, இருதரப்பு உறவில் நேர்மறையான மாற்றமொன்றின் புள்ளியாக அமையும் - என்று இந்திய வெளியுறவுச் செயலர் வினய் மோஹன் குவத்ரா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

எனது இக்குறுகிய விஜயத்தின்போது எங்களால் சாதிக்க முடிந்த விடயங்களை உங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்வதற்கு விரும்புகின்றேன். இங்கு வருகை தந்த நான் வெளிவிவகார அமைச்சர், இலங்கை ஜனாதிபதி ஆகியோரை சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்தேன்.

அத்துடன் வெளியுறவுத் துறை செயலாளருடனும் சந்திப்பினை மேற்கொள்ள முடிந்தது. மதிய உணவு விருந்துபசாரத்தின் பக்க நிகழ்வாக குறிப்பிட்ட சில அமைச்சர்களைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஜனாதிபதி இந்தியாவுக்கு மேற்கொள்ளவிருக்கும் விஜயத்துக்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்வதே எனது இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

இலங்கை தலைமைத்துவத்துடனும் அதேபோல வெளிவிவகார அமைச்சுடனும் நடைபெற்றிருந்த பேச்சுகள், இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயமானது இருதரப்பு உறவில் நேர்மறையான மாற்றமொன்றின் புள்ளி என்பதனை உறுதிப்படுத்துவதற்கான முயற்சியாகவே அமைந்தன.

அத்துடன் இந்த விஜயத்துக்கு முன்னதாக எம்மால் முன்னெடுத்துச்செல்லக்கூடிய ஒத்துழைப்பு நடவடிக்கைகளின் முக்கிய விடயங்கள், விஜயத்தின்போதான செயற்பாடுகள், இலங்கை தலைமைத்துவத்தின் முன்னுரிமைகள் ஆகியவை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், உறவுகள் தொடர்பாக எமது தலைமைத்துவத்தின் நோக்கு, உறவின் பலம், உறவினை அடிப்படையாகக் கொண்ட ஒத்துழைப்பின் பல்வேறு கூறுகள், இந்தியாவும் இலங்கையும் அனுபவிக்கும் பொருளாதார பங்குடைமை முழுவதும் எதிர்வரும் ஆண்டுகளில் காணப்படும் முக்கிய கூறுகள். தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நான் கூறியதைப் போலவே, இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் வெற்றியினை உறுதிப்படுத்துவதே எமது பிரதான இலக்காகும். அவர் நன்கறியப்பட்ட ஒரு தலைவர் என்பதுடன் உறவுகளுக்கு மிகவும் வலுவாக ஆதரவளிப்பவர். கடந்த 14 முதல் 16 மாதங்களில் இலங்கை எதிர்கொண்டிருந்த பல்வேறு சவால்களை எதிர்கொள்வதில் நாம் மிகுந்த ஒத்துழைப்புடன் ஒன்றிணைந்து பணியாற்றியுள்ளோம். மேலும், அவருக்காக மிகவும் அன்பான வரவேற்பளிக்க இந்தியா காத்திருக்கின்றதென என்னால் உறுதியாக கூற முடியும்.

ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை நாங்கள் ஆவலுடன் எதிர்நோக்குகிறோம், மேலும் அவரது விஜயத்தை வெற்றிகரமான ஒன்றாக மாற்றவும் அவ்வழியில் எங்கள் உறவை வெற்றியடையச் செய்யவும் நாம் எதிர்பார்க்கின்றோம்-என்றார். (அ)

# பெற்றோலியம் தொடர்பில் புதிய வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, ஜூலை 12

நாட்டில் பெற்றோலிய இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, வழங்கல் , விநியோகம் போன்றவற்றுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயல்முறை தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் வெளியிட்டுள்ளார்.

வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு அமைச்சருக்கு அதிகாரமுள்ளது.

நிதி மற்றும் தொழில்நுட்பத் திறன் கொண்ட நிறுவனங்கள் அமைச்சின் செயலாளரிடம் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அந்த விண்ணப்பங்கள் குழு ஒன்றால் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், அமைச்சரால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் நிறுவனங்கள் இலங்கையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர் வருடாந்த கட்டணத்திற்கு உட்பட்டு, 20 வருட காலப்பகுதிக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தற்போது சீனாவின் சினோபெக் நிறுவனமும் அமெரிக்காவின் ஆர். எம். பார்கஸ் நிறுவனமும் நாட்டின் பெற்றோலிய சந்தைக்குள் பிரவேசிக்க ஒப்பந்தம் செய்துள்ள நிலையில், அவுஸ்திரேலியாவின் யுனைற்றெட் பெற்றோலியம் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்படவுள்ளது.

சீனாவின் சினோபெக் நிறுவனம் ஏற்கனவே சினோபெக் சிறீலங்கா என்ற பெயரில் இலங்கையில் தமது நிறுவனத்தை பதிவு செய்துள்ளது. (அ)

## கடற்படைக்கு...

முன்பாக எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

எனினும், இதன்போது கடற்படை முகாம் முன்பாக பொலிஸார், கடற்படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு இருந்தனர். கலகம் அடக்கம் ஏற்பட்டால் தடுக்கவும் கடற்படையினர் தயார் நிலையில் இருந்தனர். இவர்கள் போராட்டகாரர்களை அச்சுறுத்தும் வகையில் காணொலி, ஒளிப்படங்களை எடுத்தனர்.

எனினும், அறிவிக்கப்பட்டபடி நில அளவையாளர் திணைக்களத்தினர் நேற்றைய தினம் அளவீட்டு பணிக்காக அங்கு வரவில்லை.

இதேசமயம், போராட்டத்தின் நிறைவில் போராட்டகாரர்களுக்கு பிஸ்கெட், குளிர்பானம் என்பவற்றை கடற்படையினர் வழங்க முயன்றனர். அதை வாங்க மறுத்த போராட்டக் காரர்கள் கடற்படையை மண்டைதீவி லிருந்து வெளியேறுமாறும் கோஷம் எழுப்பினர்.

(ஐ- 03)

(தொடர்புடைய செய்திகள் பக்கங்கள் 7, 12இல்)

## 35ஆயிரம்...

வெற்றிடங்கள் நிலவுகின்றன. கிழக்கில் மூதூர் கல்வி வலயத்துக்கு மாத்திரம் 1300 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றன என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாணத்தில் போருக்கு பின்னர் பாடசாலைகளை ஆரம்பித்த போது 64 பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. 200 பாடசாலைகள் வரையில் வட மாகாணத்தில் மூடப்பட்டுள்ளன - என்றும் அவர் கூறினார். (ஐ)

## இந்திய...

கடிதம் இன்று வியாழக்கிழமை இந்திய தூதுவரிடம் ஒப் படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரும் 20ஆம் திகதி இந்தியாவுக்கு பயணமாகிறார். இதன் போது, இந்திய பிரதமர் தமிழர் பிரச்னை தீர்வு விடயம் தொடர்பில் அவருக்கு அழுத்தம் வழங்க வேண்டும் என்று கோரி தமிழ் தரப்புகள் கடிதம் அனுப்பி வருகின்றன.

இந்தநிலையில், ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரனின் இல்லத்தில் நேற்றுக் கூடிய, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி) பங்காளிக் கட்சிகளான புளொட் தலைவர் த. சித்தார்த்தன், ஈ. பி. ஆர். எல். எவ்வின் தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் ஆகியோர் நேற்று ஒப்பமிட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா ஆகியோர் இதில் ஒப்பமிட்ட பின்னர் இன்று வியாழக்கிழமை இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடம் இந்தக் கடிதம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியப் பிரதமர் மோடிக்கான கடிதத்தில் இந்திய இலங்கை ஒப்பந்தம் பிரகாரம் கொண்டு வரப்பட்ட 13ஆம் திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதுடன் வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதாக ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

இதேசமயம், இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளது. இதேபோன்று இலங்கை தமிழரசு கட்சியும் தனியாகக் கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழர்கள்...

நிகழும். இலங்கை தொடர்பாக இந்திய தரப்புக்கு பல விடயங்கள் தெரிவிக்கப்படும். குறிப்பாக இந்தியா தமிழ் மக்களின் விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்துகிறது.

இதனால், தமிழர் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள், அதிகாரப் பகிர்வு தொடர்பான விடயங்களுக்கு ஜனாதிபதி அதிகம் முக்கியத்துவம் கொடுத்து அவற்றை இந்திய தரப்புக்கு தெளிவுபடுத்துவார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு முட்டிமோதிக் கொண்டு கடிதம் அனுப்புவது பயனற்றது. அரசியல் இலாபம் கருதியே தமிழ்க் கட்சிகள் இவ்வாறு நடந்துகொள்கின்றன.

13ஆவது திருத்தச் சட்ட நடைமுறை உடனடி சாத்தியமற்றது. பாராளுமன்றத்தின் மூலமே இது அனுமதிக்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் சமஷ்டி தீர்வை கோருகின்றன. இது ஒருபோதும் சாத்தியமற்றது. அரசாங்கம் இதற்கு அனுமதி வழங்காது. கூட்டாட்சி எனப்படும் சமஷ்டி என்பது நாட்டை துண்டாடும் என்பது அனைவருக்கும் தெரியும். சமஷ்டி தொடர்பில் பேசுவது பயனற்றது. இருக்கின்ற அரசமைப்பை மறுசீரமைத்து அல்லது புதிய அரசமைப்பு நாட்டு மக்கள் விரும்பும் தீர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்துக்குள் வழங்குவார் - என்றார்.

(ஐ)

## தமிழர்...

ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் மக்களின் காணிகளை வலுக் கட்டாயமாக ஆக்கிரமித்து கடற்படை முகாம் அமைப்பதற்காக இங்கு அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எம்மைப் பொறுத்தவரை தமிழரது நிலங்களை சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கமைய ஆக்கிரமித்துள்ள கடற்படை முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். இந்த மக்களுடைய காணிகள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும்.

தீவகப் பகுதியை படையினர் ஆக்கிரமித்தபோது குறிப்பாக கோட் டபாய பொறுப்பிலிருந்த காலப்பகுதி யில் நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டும் மிகக் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டும் ஆங்காங்கே புதைக்கப் பட்டுள்ளனர் என்பது உயிருடன் வாழ்ந்துகொண்டிருந்தவர்களின் சாட்சி.

எனவே படையினர் இங்கிருந்து வெளியேறுகின்றபோதே புதைகுழிகளைத் தோண்டி உடலங்களை எடுத்து காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை விசாரணை மூலம் கண்டறிய முடியும்.

இங்கு அனைத்துக் காணிகளும் விடுவிக்கப்பட்டு மீள் குடியேற்றம் இடம்பெற்றுவிட்டது என்று அரசாங்கம் உலகத்திற்குச் சொல்லிக்கொண்டு மறுபுறத்தில் காணி அபகரிப்பு நடவடிக்கைளை தொடர்ந்தும் மேற்கொள்கின்றனர்.

இன்று மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது இங்கு வந்து போராடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றால் அரசு தமிழர்களின் கருத்துக்களை கணக்கெடுக்கவில்லை என்பதே அர்த்தமாகும். தமிழர்களோடு பேசி சர்வதேசத்தை ஏமாற்றி உதவிகளைப் பெற்று தென்னிலங்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையையே மேற்கொள்கின்றது.

ஆகவே, வடக்கு- கிழக்கில் தமிழர் விவகாரத்தில் நீதித்துறை சுயாதீனமற்றதென மீள மீள நிரூபித்த வண்ணமுள்ளது. இந்த போராட்டங்களூடாகவே உரிமைகளை வென்றெடுக்க முடிவதுடன் இம் மண்ணில் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ள முடியும்-என்றார்.

### கடந்த 6 மாத காலத்தில்

# முகநூல் தொடர்பில் 10,000 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஜூலை 13

கடந்த ஆறு மாத காலப் பகுதியில் முகநூல் தொடர்பில் சுமார் பத்தாயிரம் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தெரியவருகிறது.

இலங்கை கணனி அவசர பதிலளிப்பு பிரிவின் சிரேஷ்ட தகவல் தொழிநுட்பப் பொறி யியலாளர் சாருக தமனுபொல இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் அதிக எண்ணிக்கையான 2330 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு, கம்பஹா, அம் பாறை, பொலன்னறுவை, காலி போன்ற பிரதேசங்களில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு முறைப்பாடு செய்தவர்களில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

போலி முகநூல் கணக்கு பயன்பாடு, முகநூல் கணக்குக்கு அனுமதியின்றி பிரவே சித்தல், இணைய வழியில் தொழில் வாய்ப்பு வழங்குவதாக கூறி பண மோசடி செய்தல் போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. (அ)

## கொழும்பில்...

பந்துல குணவர்த்தன இன்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இதனிடையே, அநுராதபுரம் - ஓமந்தை வரையான 62 கி. மீற்றர் ரயில் பாதை இந்திய கடன் உதவியின் கீழ் 3 ஆயிரத்து 300 கோடி ரூபாய் செலவில் திருத்தியமைக்கப்பட்டது. இந்தப் பாதை மூலம் 100 கி. மீற்றர் வேகத்தில் ரயில்களை இயக்க முடியும். இதனால், யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் பயண நேரம் ஆறரை மணி நேரமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே,

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில்களுக்கான ஆசன முன்பதிவு சேவையும் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.(ஐ)

## நல்லிணக்க...

இந்த முயற்சிகளுக்கு தென்னாபிரிக்கா, சுவிற்சர்லாந்து மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும் விசேட ஒத்துழைப்புகளை வழங்கிவருகின்றன.

தென்னாபிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை முன்மாதிரி யாகக் கொண்டு இலங்கையில் ஸ்தாபிக்கப் படவுள்ள உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அவசியமான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை தென்னாபிரிக்காவும், இந்த ஆணைக் குழு தொடர்பான சட்டமூலத்தை தயா ரிப்பதற்கான ஒத்துழைப்புக்களை சுவிற்சர் லாந்தும், இதற்குரிய நிதி உதவியை ஜப்பா னும் வழங்குவதாக அறியமுடிகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிஸூகொஷி ஹிடேகி, இலங்கைக்கான சுவிற்ஸர்லாந்து தூதுவர் டொமினிக் ஃபக்ளெர் மற்றும் இலங்கைக்கான தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் சன்டைல் எட்வின் ஸ்கால்க் ஆகியோருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான சந்திப் பொன்று நேற்றுமுன்தினம் நிகழ்ந்தது.

இச்சந்திப்பின்போது இலங்கையில் சமாதானத்தை கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி இவ்வனைத்து தரப்புக்களும் மிக நெருக்கமாக பணியாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து ஆராயப்பட்டது டன், இந்த இலக்கை அடைந்துகொள்வ தில் இலங்கைக்கு வழங்கக்கூடிய உதவிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (ஐ)

## இருமருந்துகள்...

சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பெண்கள் சிலர் உயிரிழந்தனர். இதையடுத்து, குறித்த மயக்க மருந்து தொடர்பில் சுகாதார தரப்பினர் தமது கவனத்தை செலுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எடுத்ததற்...

அவசியம் என்று தமிழ் அரசியல்வாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையில் இது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வன்னிப் பிரதேசம் யுத்தம் நடந்த பூமி. இங்கு மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நீதிமன்ற உத்தரவுக்கு அமையவே அது தோண்டப்பட்டு - விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனை விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சம்பவங்கள் நடக்கும் இடங்களில் அரசாங்க புலனாய்வாளர்களின் பிரசன் னம் இருக்கும் - இதனை தவிர்க்க முடி யாது.

மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் நீதிமன்ற உத்தரவில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தமிழ் அரசியல்வாதிகள் எடுத்ததற்கெல்லாம் சர்வதேச விசாரணை, சர்வதேச கண்காணிப்பு என்று கோருவது சிறுபிள்ளைத்தனமானது.

உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் - என்றார். (ஐ)

## ஹெரோயினுடன்...

புதன்கிழமை தண்டனைத் தீர்ப்பளித்தது வவுனியா மேல் நீதிமன்றம். 2017 ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து எதிரி கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ஒரு கிலோ 135 கிராம் ஹெரோயின்போதைப்பொருள்கைப்பற்றப்பட்டது.

அவருக்கு எதிராக வவுனியா நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்ற ஆரம்ப விசாரணைகளையடுத்து 2019ஆம் ஆண்டு ஜூன் 13ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றில் இரண்டு குற்றச்சாட் டுகளின் கீழ் சட்ட மா அதிபரினால் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

உயிர்க்கொல்லி போதைப்பொருளான ஹெரோயினை உடமையில் வைத்திருந்தமை, அதனை விற்பனை செய்யும் நோக்குடன் கடத்த முற்பட்டமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுக்கள் எதிரிக்கு எதிராக முன்வைக்கப்பட்டது.

“அரச பகுப்பாய்வு திணைக்களத்தின் பகுப்பாய்வு அறிக்கை மற்றும் பொலிஸ் சாட்சிகளின் அடிப்படையில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத் தொடுநர் நிரூபித்துள்ளார். இதனால் எதிரி மீதான இரண்டு குற்றச்சாட்டுகளிலும் அவர் குற்றவாளியாக அடையாளம் காணப்படுகிறார்” என்று மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்தார்.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தனித் தனியே தூக்குத் தண்டனை என இரட்டைத் தூக்கு தண்டனை வழங்கி தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## ஜனாதிபதி செயலகத்தில் 60 அதிகாரிகள் நியமனம்

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி செயலகத்தில் 60 அதிகாரிகளை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 41ஆவது சரத்தின் விதிகளுக்கு அமைய ஜனாதிபதி இந்த நியமனங்களை செய்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நியமிக்கப்பட்ட குழுவில் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள், ஜனாதிபதியின் உதவிச் செயலாளர்கள், முழுநேர பணிப்பாளர்கள், கணக்காளர்கள் மற்றும் நிதி அதிகாரிகள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

## மனித புதைகுழிகள் குறித்து எனக்கு எதுவுமே தெரியாது!

### பொதுபாதுகாப்பு அமைச்சின் செயலர்

கொழும்பு, ஜூலை 13

கொக்குதொடுவாய் மனிதப் புதைகுழி விடயம் தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

எனக்கு மனிதப் புதைகுழி குறித்து எதுவும் தெரியாது. எந்த தரப்பும் அது குறித்து எந்தத் தகவலையும் வழங்கவில்லை என அவர் கூறினார்.

இதேவேளை, முல்லைத்தீவு மனித புதைகுழியை மீண்டும் அகழ்வது குறித்து ஆராய்வதற்கு தொடர்புபட்ட அனைத்து தரப்பினரையும் முல்லைத்தீவு நீதிமன்றம் அழைத்துள்ளது.

இந்த கலந்துரையாடல் இன்று இடம்பெறவுள்ளது.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிகளை அகழும் பணிகள் நீதவானின் உத்தரவின் பேரில் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளபோதிலும் அவை மீண்டும் ஆரம்பமாகும் என பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## மேலும் 300 பொருட்களின் இறக்குமதி தடை தளரும்!

கொழும்பு, ஜூலை 13



மேலும் 300 பொருட்களுக்கான இறக்குமதி கட்டுப்பாடுகள் விரைவில் நீக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உறுதிப்படுத்தியுள்ளார்.

அடுத்த வாரம் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இலத்திரனியல் பொருட்கள் உட்பட 300 இற்கும் மேற்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகள் ஜூன் 9 ஆம் திகதி நீக்கப்பட்டன.

இது தொடர்பான வர்த்தமானியை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு நாயகம் வெளியிட்டுள்ளார்.

அதற்கமைவாக இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட பொருட்களின் எண்ணிக்கை 1,216 ஆக குறைக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக சுமார் 4,000 பொருட்களை இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கூறினார்.

எவ்வாறாயினும், 3,000 இற்கும் மேற்பட்ட பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அவர்களால் தன்னிச்சையான முடிவுகளை எடுக்க முடியாது என்றும், கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்ட செயல் தவிர்க்க முடியாது என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

அனைத்து முன்மொழிவுகளையும் பரிந்துரைகளையும் பரிசீலிப்பதாகவும், ஆனால் இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவது குறித்து இலங்கை மத்திய வங்கியின் தீர்மானத்தின் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய வலியுறுத்தினார். (அ)

# இனப்படுகொலையின் மிகமுக்கிய சாட்சியமாக மண்டைதீவுக் கிணறு!

### சுட்டிக்காட்டுகிறார் சிறிதரன் எம்.பி.



யாழ்ப்பாணம், ஜூலை 13

**இனப்படுகொலையின் முக்கிய சாட்சியமாக மண்டைதீவு கிணறு காணப்படுவதாகவும் அவற்றினை ஆய்வுக்குட்படுத்தினால் இனப்படுகொலைச் சாட்சியங்கள் வெளியாகும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.**

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு கிழக்கு கிராம சேவகர் பிரிவில் 29 தனி நபர்களுக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கு அதிகமான காணிகளைச் சுவீகரித்து கடற்படை முகாம் அமைப்பதை தடுத்து நிறுத்தக் கோரி மக்கள் பிரதிநிதிகள், பொது மக்கள் இணைந்து நேற்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தின் நிறைவில் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெலுசுமண கடற்படை முகாமுக்கு வழங்குவதற்காக காணியை அளக்க முயற்சித்தபோதே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்.

மண்டைதீவு கிழக்கிலுள்ள இப்பிரதேசமானது சிறந்த மண் வளத்துடன் நீர் வளத்தையும் உடைய செழிப்பான விவசாய நிலமாகும். இந்த நிலத்தை 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து ஆக்கிரமித்துள்ள இராணுவம் இன்று வரை அகலாதுள்ளனர்.

வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவைச் சேர்ந்த 60 இற்கு மேற்பட்ட இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு கத்தோலிக்கத் தேவாலயத்திற்கு முன்னாலுள்ள கிணற்றினுள் புதைக்கப்பட்டு இன்றும் எலும்புக் கூடுகளாகக் காணப்படுகின்றனர்.

இவற்றை ஆய்வு செய்யும்படி வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் பாராளுமன்றத்தில் கோரியபோதும் இதுவரை நடைபெறவில்லை.

கடற்படை இவ்விடத்தைவிட்டு செல்லுமிடத்து இவ்விடம் ஆய்வுக்குட்படுத்தப்படின் இனப்படுகொலைச் சாட்சியங்கள் வெளியாகும் என்பதால் கடற்படை தொடர்ந்தும் ஆக்கிரமித்துள்ளது. இதற்கு அரசும் தொடர்ந்து ஆதரவளிக்கின்றது.

இவ் விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் கூடுதல் கவனமெடுத்து இங்குள்ள புதைகுழிகளைத் தோண்டவேண்டும்.

தற்போது 18 ஏக்கரென நில அளவைத்திணைக்களம் குறிப்பிட்டாலும் 40 இற்கு மேற்பட்ட ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. ஆகவே காலங்காலமாக மக்கள் வாழ்ந்து வந்த பூர்வீக நிலங்களை மீள ஒப்படைக்கவேண்டும் - என்றார். (அ)

# இந்திய மீனவர்கள் விவகாரத்தில் உரிய முடிவு எட்டப்படவேண்டும்!

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், ஜூலை 13

இந்திய மற்றும் இலங்கை அரச தரப்பிற்கும் தொழிலாளர் தரப்புக்களிற்கும் இடையில் பேச்சு வார்த்தை நடைபெற்று இருப்பினும் இதுவரை ஆக்கபூர்வமான முடிவுகள் ஏதும் எட்டப்படாது இருப்பதானது வேத னைக்குரிய விடயம் என ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் தொடர்ந்து மீன்பிடிப்பதானது இலங்கைத் தொழிலாளர்களுக்கு பாரிய இழப்பை ஏற்படுத்தும்.

இந்திய மற்றும் இலங்கை அரச தரப்புக்களுக்கிடையேயும் தொழிலாளர் தரப்புக்களுக்குமிடையேயும் பேச்சுவார்த்தை நடைபெற்றிருப்பினும் இதுவரை ஆக்கபூர்வமான முடிவுகளேதும் எட்டப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

ஏற்கனவே பல வருடங்களுக்கு முன்னர் டில்லியில் நாங்கள் பேசியிருக்கின்றோம். பாக்குநீரிணை மற்றும் மன்னார் வளைகுடா போன்ற இந்தியக் கடற்பரப்புக்கள் மீன்வளங்கள் அற்றுப்போகக்கூடிய சூழ்நிலையில் தான் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பி னுள் வருகின்றார்கள் என்பது தான் யதார்த்தம்.

இந்தியா மீனவர்கள் மடி வலைகளைப் பயன்படுத்தி கடலின் அடிமட்டத்திலுள்ள அனைத்தையும் வாரி அள்ளிக்கொண்டு செல்கின்றார்கள் என்பது பாரிய குற்றச்சாட்டாகவுள்ளது.

அது மட்டுமல்ல எமது தொழிலாளர்களின் வலைகளையும் அறுத்துக்கொண்டு செல்கின்றார்கள்.

டில்லிக்கு ஜனாதிபதி செல்லும்போது கடற் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அவரு டன் செல்வதாக நாங்கள் அறிகின்றோம். குறித்த மீனவர்களின் பிரச்னைகள் தொடர்பில் பேசாதுவிடின் அவரது குறைபாடாகவே கருதுகின்றோம் - என்றார். (அ)

# டெங்கு ஒழிப்பு அதிகாரிகளின் நியமனத்தை நிரந்தரமாக்குக!

### எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 13

டெங்கு ஒழிப்பு அதிகாரிகளின் நியமனங்களை நிரந்தரமாக்க, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் டெங்கு ஒழிப்பு அதிகாரிகளின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொருளாதார நெருக்கடியில் புதிய வேலைவாய்ப்புகளை வழங்குவது கடினமாகும்.

ஆனால், டெங்கு ஒழிப்பு பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், 7 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் டெங்கு ஒழிப்புக்கு 22000 ரூபா உதவித்தொகையுடன் பணிக்கமர்த்தப்பட்டனர்.

180 நாள் சேவை நாட்களுக்குள் இந்த அரச அதிகாரிகளை நிரந்தரமாக்கல் மேற்கொள்ள வேண்டும் என்ற நிலை இருந்தும் அது அவ்வாறு அமுல்படுத்தப்படவில்லை.

இதனால் 1105 அதிகாரிகள் சேவையை கைவிடப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த அதிகாரிகளின் உரிமைகளுக்காக எதிர்காலத்திலும் போராட நாம் தயாராகவே உள்ளோம்.

இவர்களின் சேவையை நிரந்தரப்படுத்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல விருப்பம் தெரிவித்த போதிலும், அது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அமைச்சரவையால் நிராகரிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் இதேபோன்ற பல அமைச்சரவைப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக ஜனாதிபதியும், அரசாங்கமும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இவர்களின் நியமனங்களை நிரந்தரமாக்க நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.